Registered as a news paper

பக்கங்கள்: பன்னிரண்டு

விலை: ரூபா 8.00

# நமது ஈழநாடு

தமிழர் தாயகத்தின் முன்னோடி நாளிதழ்

தரமிகு அறுசுவை உணவுகளுடன் ஐஸ்கிறீம் வகைகளுடன் உங்களை நாடி

Mango'S

வெகு விரைவில்

மலர்:03 திருவள்ளுவர் ஆண்டு: 2036 ஆடி - 25 ஆம் நாள் ஹிஜ்ரி 1428 றஜபு 04 (10.08.2005) புதன்கிழமை இதழ்:314

# கருணா குழுவின் ஆயுதங்களைக் களைய ஒருபோதும் அரசு நடவடிக்கை எடுக்காது!



## ஜயந்த தனபால திட்டவட்டமாகத் தெரிவிப்பு

கொழும்பு —

கிழக்கில் அரச படைகளின் ஆதரவுடன் செயற்படும் ஆயுதக்குழுக்கள் மற்றும் துணைப்படைகளின் ஆயுதங்களைக் களைந்து - புலிகள் மீதான நிழல் யுத்தத்தை அரசு நிறுத்தவேண்டும் எனப் புலிகள் கோரிக்கை விடுத்திருந்தாலும் -

கருணா குழுவிடமிருந்து ஆயுதங்களைக் களையும் நடவடிக்கையில் தாம் ஒருபோதும் ஈடுபடப்போவதில்லை என்று அரசாங்க சமாதான செயலகப் பணிப்பாளர் ஜயந்த தனபால தெரிவித்தார்.

றொய்ட்டர் செய்தி நிறுவனத்துக்கு அளித்த பேட்டியிலேயே அவர் இவ்வாறு குறிப்பிட்டார். அவர் தனது பேட்டியில் மேலும் -

விடுதலைப் புலிகள் இவ்வாறு கோரிக்கை விடுத்திருப்பது மீண்

(12 ஆம் பக்கம் பார்க்க)

## பொதுக்கட்டமைப்பு குறித்து நாடாளுமன்றில் விவாதம்!

கொழும்பு —

சுனாமி மீளமைப்புக்கான பொதுக் கட்டமைப்புத் தொடர்பாக நாடாளுமன்றத்தில் நாளையும் நாளைமறுதினமும் விவாதம் நடைபெறவுள்ளது.

நாடாளுமன்றம் நேற்றுக்காலை கூடியபோது யாழ்ப்பாண பொலிஸ் உயர் அதிகாரி சார்ள்ஸ் விஜேரத்ன மரணம் தொடர்பாக ஜாதிக ஹெல உறுமயவின் நாடாளுமன்ற குழுத் தலைவர் அத்துரலிய ரத்ன தேரர் கேள்வியெழுப்பினார்.

இதற்குப் பதிலளித்த பிரதிப் பாதுகாப்பு அமைச்சர் ரத்னசிறி விக்கிரமநாயக்க - இந்த மரணத்துக்குக் காரணமானவர்களை நீதிமன்றின் முன்பாக அரசு கண்டிப்பாக நிறுத்தும். இது தொடர்பாக குற்றப் புலனாய்வுத் திணைக்களம் உரிய விசாரணை மேற்கொண்டு வருவதாகவும் அவர் மேலும் தெரிவித்தார்.

இந்த நிலையில், கடந்தவாரம் நடந்த அனைத்துக் கட்சித் தலைவர்

(12 ஆம் பக்கம் பார்க்க)

## சமாதானத்தை ஏற்படுத்துவதற்காக முழங்காலில் மண்டியிட முடியாதாம்!

### கடற்படை அதிகாரி சரத் வீரசேகர

கொழும்பு —

சமாதானத்திற்காக தாம் முழங்காலில் மண்டியிடப் போவதில்லை என்று கடற்படையின் பிரதித் தலைமை அதிகாரி றியர் அட்மிரல் சரத் வீரசேகர தெரிவித்தார்.

கடற்படையின் 121 ஆவது பிரிவின் பயிற்சி நிறைவில் கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார். புனாவ கடற்படை பயிற்சி நிலையத்தில் கடந்த சனிக்கிழமை இந்தப் பயிற்சி நிறைவு நிகழ்வு இடம்பெற்றது. இந்தப் பயிற்சியை 391 கடற்படையினர் நிறைவு செய்தனர்.

அங்கு அவர் தொடர்ந்து உரையாற்றுகையில்-

நாம் சமாதானத்தை விரும்புகின்றோம். ஆனால், சிறுபிள்ளைத்தனமான, பலவீனமான சமாதான முயற்

(12 ஆம் பக்கம் பார்க்க)

### படையினருடன் தொடர்புடைய குற்றங்கள்

## 30 நிமிடங்களுக்குள் நீதிவானுக்கு பொலிஸார் அறிவிக்க வேண்டும்!

### யாழ். மாவட்ட நீதிவான் உத்தரவு

யாழ்ப்பாணம்

யாழ். மாவட்ட நீதிமன்ற நியாயாதிக்க எல்லைக்குட்பட்ட பிரதேசத்தில் - முப்படையினர் அல்லது பொலிஸாருடன் தொடர்புடைய குற்றச் செயல்கள் ஏதாவது நடைபெற்றால் - அந்தப் பிரதேச பொலிஸார் 30 நிமிடத்திற்குள் நீதிவானுக்கு அறிவிக்க வேண்டும் என யாழ். மாவட்ட நீதிபதி ஆர்.ரி.விக்னராஜா உத்தரவிட்டார்.

யாழ்.மாவட்டத்தில் அண்மைக் காலமாக இடம்பெற்றுவரும் குற்றச் செயல்கள் தொடர்பாக நேற்று முன்தினம் யாழ். நீதிமன்றத்தில் நடைபெற்ற கலந்துரையாடலிலேயே அவர் இவ்வாறு உத்தரவிட்டார்.

இந்தச் சந்திப்பில் காங்கேசன்துறை பொலிஸ் தலைமையக சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் தல்பதாது, 512 ஆவது கட்டளைத்தளபதி பிரிகேடியர் பராக்கிரம பன்னிப்பிட்டிய, யாழ். மேலதிக நீதிவான் ஶ்ரீநிதி நந்தசேகரன் ஆகியோர் கலந்துகொண்டனர்.

யாழ்.மாவட்ட நீதிமன்ற நியாயாதிக்க எல்லைக்குட்பட்ட பகுதிகளில் இராணுவம், பொலிஸ், கடற்படை, விமானப்படை ஆகியவற்றுடன் தொடர்புடைய குற்றச்செயல்கள் நடைபெற்றால் - சம்பந்தப்பட்ட அதிகாரிகளின் ஊடாக பிரதேச பொலிஸ் நிலையத்துக்கு தெரிவிக்கப்படவேண்டும்.

பொலிஸார் 30 நிமிடத்திற்குள்

(12 ஆம் பக்கம் பார்க்க)

## இலங்கை அணி வெற்றி!




விபரங்கள் உள்ளே

## ஜெயசூரிய 10,000 ஓட்டங்கள்!




கொழும்பு —

இலங்கை கிரிக்கெட் வீரர் சனத் ஜெயசூரிய - ஒருநாள் சர்வதேச போட்டிகளில் பத்தாயிரம் ஓட்டங்களை நேற்றுக் கடந்து சாதனை படைத்தார்.

இந்திய அணிக்கு எதிராக நேற்று நடைபெற்ற ஆட்டத்தில் - ஜெயசூரிய 77 பந்துகளில் 67 ஓட்டங்களை எடுத்தார். இதில் இவர் பத்தாவது ஓட்டத்தைக் கடந்த போது - பத்தாயிரம் ஓட்டங்கள் என்ற சாதனையை படைத்த நான்காவது

(12 ஆம் பக்கம் பார்க்க)

## வீதியால் சென்ற வாகனங்களை படையினர் வழிமறித்து சோதனை

### பருத்தித்துறைப் பகுதியில் சம்பவம்


பருத்தித்துறை —

பருத்தித்துறைப் பகுதியில் பொலிஸாரும், இராணுவத்தினரும் வீதியால் சென்ற வாகனங்கள் அனைத்தையும் சோதனையிட்டதுடன், பயணிகளும் இறக்கப்பட்டு சோதனையிடப்பட்டனர்.

பருத்தித்துறை - யாழ்ப்பாணம் வீதியில் மெத்தைக் கடைச் சந்தி, பருத்தித்துறை புஸ் டிப்போ ஆகிய பகுதிகளில் பெருமளவு பொலிஸாரும், இராணுவத்தினரும் இணைந்து அனைத்து வாகனங்களையும் மறித்து, பயணிகளைக் கீழே இறக்கி கடுமையான சோதனை நடவடிக்கையை

(12 ஆம் பக்கம் பார்க்க)

## பாதுகாப்பாக திரும்பியது 'டிஸ்கவரி' விண்கலம்!



கலிபோர்னியா —

டிஸ்கவரி விண்கலம் நேற்று பாதுகாப்பாக அமெரிக்காவின் கலிபோர்னியாவில் உள்ள எட்வேட்ஸ் விமானப் படைத் தளத்தில் தரையிறங்கியது.

2003 ஆம் ஆண்டு கொலம்பிய விண்கலம்

(12 ஆம் பக்கம் பார்க்க)




ஒதுக்கீடுகளுக்கு அழையுங்கள்

EXPOAIR

021-2223891, 2226297, 077-2349999, 011-2372952/3, 011-2360290/1

email: jaffna@expoavi.com, reservations@expoavi.com. Your friend in the skies...

இலங்கையில் முன்னணி வகிக்கும் உங்கள் உள்ளூர் விமான சேவை...



# அரைக்கும் ஆலைகளின் பெயர்ப் பலகையில் தமிழில் பெயர், முகவரி எழுதப்படவேண்டும்

## தமிழீழ சுகாதார சேவையினர் அறிவிப்பு

கிளிநொச்சி

அரைக்கும் ஆலைகள், அரிசி ஆலைகள் ஆகியவற்றுக்கு பெயர்ப்பலகைகள் பொருத்தப்பட்டு அதில் உரிமையாளரின் பெயரும், அரைக்கும் ஆலையின் பெயர் மற்றும் முகவரிகள் தமிழில் எழுதப்படவேண்டும் என - தமிழீழ சுகாதார சேவை அறிவித்துள்ளது.

கிளிநொச்சி, முல்லைத்தீவு, வவுனியா, மன்னார் ஆகிய மாவட்டங்களிலுள்ள அரிசி ஆலை, அரைக்கும் ஆலை உரிமையாளர்களுக்கான அறிவூட்டற் பட்டறை நேற்றுமுன்தினம் கிளிநொச்சியில் இடம்பெற்றது.

கிளிநொச்சி பண்பாட்டு மண்டபத்தில் தமிழீழ சுகாதார சேவைகள் பணிப்பாளர் ச.விக்கிரமன் தலைமையில் இடம்பெற்ற இந்த நிகழ்வில் கருத்துரைகளை கிளிநொச்சி அரச செயலக பொறியியலாளர் தயாபரசிவம், கிளிநொச்சி சுற்றாடல் சுகாதார உத்தியோகத்தர் ஏ.தமிழ்ச்செல்வி, கிளிநொச்சி பொது சுகாதார பரிசோதகர் தவராசா ஆகியோர் நிகழ்த்தினர்.

அரைக்கும் ஆலை ஒன்றுக்கான உரிமத்தைப் பெற்றுக் கொள்வதற்கு இருக்க வேண்டிய அடிப்படை ஒழுங்கு விதிகள் தொடர்பாகவும் இந்தப் பட்டறையில் விளக்கப்பட்டது.

இந்தப் பட்டறை தொடர்பாக தமிழீழ சுகாதார சேவை செய்திக்குறிப்பு ஒன்றினை விடுத்துள்ளது.

அந்தக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது -

உரிமம்- வழங்குரிமை ஆண்டுக்குரிய தமிழீழ சுகாதார சேவைகளின் உரிமத்தை - நிலையத்தில் தெளிவான பார்வைக்குரியவாறு சுவரில் மாட்டியிருத்தல் வேண்டும். இந்த உரிமம் முன்னர் இரத்துச் செய்தால் அன்றி வழங்கப்பட்ட ஆண்டு மார்கழி 31 ஆம் திகதி முடிவுறும்.

நிலையத்துக்கு வெளியே பெயர்ப் பலகை பொருத்தப்பட்டிருத்தல் வேண்டும். பலகையில் உரிமையாளரின் பெயரும், அரைக்கும் ஆலையின் பெயரும், முகவரியும் தமிழில் தெளிவாக எழுதப்பட்டிருத்தல் வேண்டும்.

நிலையம் அமைந்துள்ள சூழல் சுகாதார ரீதியில் பொருத்தமுடையதாக இருப்பதுடன், காற்றோட்டம், வெளிச்சவசதி உடையதாக இருத்தல் வேண்டும்.

அரைக்கும் அறை, களஞ்சிய அறை எனப் பிரித்து அமைக்கப்பட்டிருத்தல் வேண்டும். போதியளவு காற்றோட்டம், வெளிச்சம் படக்கூடிய முறையில் சுவர், கூரை என்பன பொருத்தமானதும், உறுதியானதுமான மூலப் பொருட்களால் அமைக்கப்பட்டு ஏற்ற இடத்திற்கு வெள்ளை அடிக்கப்பட்டிருத்தல் வேண்டும்.

கூரைப் பகுதி சீலிங் அடிக்கப்பட்டிருப்பதுடன் நிலமட்டத்திலிருந்து சீலிங் குறைந்தது 7 அடி உயரத்தில் இருத்தல் வேண்டும். அரைக்கப்பட்ட பொருட்கள் (மிளகாய்த்தூள், மா) நிலமட்டத்திலிருந்து உயரத்தில் வைத்தல் வேண்டும். இயந்திரங்களுக்கு பாதுகாப்பு கவசம் போடப்பட்டிருத்தல் வேண்டும்.

பணியாளர்கள் தொற்று நோயற்றவர்களாகவும், தனிநபர் சுகாதாரத்தை பேணுபவர்களாகவும், கடமை நேரத்தில் தூய்மையான மேலங்கி அணிந்திருத்தல் வேண்டும் என்பதுடன், இவர்கள் கடமை நேரத்தில் புகைத்தல், மது அருந்துதல், வெற்றிலை போடுதல் தவிர்க்கப்படல் வேண்டும்.

நிலையத்திலிருந்து வெளியேறும் கழிவுகள் (உமி, கழிவுநீர்) வெளி காற்றுடன் தொடர்புபடாது அகற்றுவதுடன் முறையில் இறுதி அகற்றல் செய்ய வேண்டும். கழிவு நீர் - இலையான் பெருக்கம் இன்றி மூடிய குழியில் வெளியுடன் தொடர்பு படாத வகையில் அகற்ற வேண்டும். அரைக்கும் ஆலையில் தூள், மா அரைக்கும் இயந்திரப் பகுதி நிலையத்தின் பிற்பகுதியில் இருத்தல் வேண்டும்.

பிரதான வீதியில் இருந்து 20 மீற்றர் அப்பாலும், பாடசாலை, வைத்தியசாலை, சந்தை, நீதிமன்றம் என்பனவற்றுக்கு அண்மையாக இருத்தலாகாது. நிலையத்தில் கடைமையாற்றுபவருக்கும் ஆலைக்கு வருபவருக்கும் பாதுகாப்பான குடிநீர் மூடிய பாத்திரத்தில் பேணப்படவேண்டும்.

நிலையத்துக்கென பாதுகாப்பான நீரடைப்பு, மலகூடம் பாவனையில் இருத்தல் வேண்டும். களஞ்சியப் பகுதியில் பாதுகாக்கப்படும் உணவுப் பொருட்கள் களஞ்சிய அறையில் நிலத்திலிருந்து உயரத்திலும் சுவரிலிருந்து அரையடி தள்ளியும் அடுக்கப்பட வேண்டும்.

எந்தவொரு சந்தர்ப்பத்திலும் மேற்படி ஒழுங்குகள் மீறப்படின் உரிமம் இரத்துச்செய்யப்படும். (மேற்படி விதிகள் தேவைக்கேற்ப தமிழீழ சுகாதார சேவைகளால் புதுப்பிக்கப்படலாம்) என தமிழீழ சுகாதார சேவை விடுத்துள்ள செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

நிகழ்வின் இறுதியில் இவ் அறிவூட்டல் பட்டறையில் கலந்துகொண்டவர்களுக்கு தமிழீழ சுகாதார சேவைகள் பணிப்பாளர் சான்றிதழ்கள் வழங்கினார்.

# தென்மராட்சி பாடசாலைகளுக்கு 11 ஆங்கில ஆசிரியர்கள் நியமனம்

தென்மராட்சி

தென்மராட்சி கல்வி வலயப் பாடசாலைகளில் நிலவும் ஆங்கில ஆசிரியர்களின் வெற்றிடத்துக்கு பகுதிநேர ஆங்கில ஆசிரியர்களாக கடமையாற்றிய 11 பேர் நியமிக்கப்பட்டுள்ளனர்.

அவர்கள் கல்வி கற்பிக்கும் பாடசாலைகளின் விபரம் வருமாறு.

ஜெனிற்றாவதனி ஜேசுதாசன் - மட்டுவில் கமலாசினி மகாவித்தியாலயம், ரங்கநாயகி தனபாலசிங்கம் - மீசாலை விக்னேஸ்வரா மகாவித்தியாலயம், பாமினி சிவயோகன் - மந்துவில் சிறிபாரதி வித்தியாலயம், சிவதாரி சிவநாதன் - நாவற்குழி மகாவித்தியாலயம், சாளினி சிறிகிருஷ்ணா - அல்லாரை அ.த.க.பாடசாலை, கௌசிகை மகிந்தன் - கொடிகாமம் அ.த.க.பாடசாலை, சுதாஜினி சங்கரப்பிள்ளை - கைதடி முத்துக்குமாரசாமி வித்தியாலயம், நூபவாகினி சிவசுப்பிரமணியம் - வரணி மகாவித்தியாலயம், சிவதனி கணபதிப்பிள்ளை - மட்டுவில் சந்திரபுரம் மகாவித்தியாலயம், யசோதா லோகநேசன் - கச்சாய் அ.த.க.பாடசாலை, தனுஷா சிவசுப்பிரமணியம் - வரணி மகவித்தியாலயம். (29)

## தகவல் தொழில்நுட்ப பரீட்சை

அடுத்த ஆண்டு க.பொ.த. உயர்தரப் பரீட்சைக்குத் தோற்றவுள்ள மாணவர்களுக்கான பொது தகவல் தொழில்நுட்ப பரீட்சை எதிர்வரும் 21 ஆம் திகதி நடைபெறவுள்ளது.

இந்த வருடம் முதல் உயர்தரத்தில் கல்வி கற்கும் அனைத்து பிரிவுகளைச் சேர்ந்த மாணவர்களுக்கும் கட்டாய பரீட்சையாக பொது தகவல் தொழில் நுட்ப பரீட்சை நடத்தப்படவுள்ளது.

இந்தப் பரீட்சை மேலதிக தகைமையாகக் கருதப்படுவதுடன், உயர்தரப் பெறுபேறுகளுடன் இணைத்துக் கொள்ளப்படமாட்டாதெனவும் தெரிவிக்கப்படுகிறது.

## நல்லூரில் இன்று!

இளங் கலைஞர் மன்றம் நல்லூர் கந்தசுவாமி கோவில் உற்சவ காலத்தை ஒட்டி தெல்லிப்பளை துர்க்காதேவி தேவஸ்தானத்தின் ஆதரவுடன் கொடியேற்றதினமான இன்று மாலை 6.30 மணிக்கு துர்க்கா மணிமண்டபத்தில் தவில், நாதஸ்வரக் கச்சேரி இடம் பெறவுள்ளது.

நாதஸ்வர வித்துவான்களான கே.ஆர்.சுந்தரமூர்த்தி, என்.ஸ்ரீதரன் தவில்வித்துவான்களான என்.ராமதாஸ், என்.பிரசாந் ஆகியோர் பங்குபற்றும் தவில், நாதஸ்வரக் கச்சேரியே இடம் பெறவுள்ளது.

# இளங்கதிர் முன்பள்ளி விளையாட்டு விழா!

அச்சுவேலி இளங்கதிர் சனசமூக நிலைய முன்பள்ளி விளையாட்டு விழா நாளை பிற்பகல் 2 மணிக்கு சனசமூக நிலைய மைதானத்தில் நிலையத்தின் தலைவர் இ.அவிஷ்குமார் தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்த நிகழ்வில் சமூக அபிவிருத்தி மன்றத் தலைவர் திருமதி ஜெகதீஸ் நவனீதன் பிரதம விருந்தினராகவும், கிராம அபிவிருத்திச் சங்க தலைவர் மு.பொன்னுத்துரை, அச்சுவேலி பிரதேச அரசியற்துறைப் பொறுப்பாளர் குபேரன், அச்சுவேலி பனைதென்னை வள அபிவிருத்தி கூட்டுறவுச் சங்க முகாமையாளர் திருஞானசம்பந்தர், கிராம அலுவலர் சிவகுலசிங்கம் ஆகியோர் சிறப்புவிருந்தினராகவும்,

கோப்பாய் முன்பள்ளி இணைப்பாளர் மகிழினி, பனை தென்னை வள அபிவிருத்தி கூட்டுறவுச் சங்கத்தின் கல்வி உத்தியோகத்தர் ஐ.இராமச்சந்திரன், அச்சுவேலி பிரதேச சபை உப அலுவலகத்தின் பொறுப்பதிகாரி தி.மாணிக்கவாசகர் ஆகியோர் கௌரவ விருந்தினராகவும் கலந்து கொள்ளவுள்ளனர்.

நிறைஞ்சனாஸ் சங்கானை
அர்ஜுன், மீனா நடித்த
செங்கோட்டை
காட்சிகள் : 11.00, 2.45, 5.00 (பு.நே)

ராஜா யாழ்ப்பாணம்
இந்தியாவிலும் இலங்கையிலும் ஒரே தின வெளியீடு! காதல் புகழ் பரத், ரேணுகா மேனன்
பெப்ரவரி 14

பு.நே: 10.30, 2.30, 6.30, 9.30

நாகம்ஸ் சுன்னாகம்
இலங்கையிலும் இந்தியாவிலும் ஒரே தின வெளியீடு!
ஜெயம்ரவி, ரேணுகாமேனன், வடிவேலு மற்றும் பலர் நடித்த

தாஸ்
காட்சிகள்:- 11.00,3.00, 7.00,10.00 (பழைய நேரம்)

மனோகரா யாழ்ப்பாணம்
மூன்றாவது வெற்றிவாரம்
இலங்கையிலும் இந்தியாவிலும்ஒரேதின வெளியீடு
மாதவன், சதா மற்றும் பலர் நடித்த
பிரியசகி

காட்சி நேரம் : (பு.நே) 10.30, 2.30, 5.30, 9.30

நாதன்ஸ் யாழ்ப்பாணம் (குளிரூட்டப்பட்டது)
இன்னும் சில நாட்கள்
அக்சன் கிங் அர்ஜுன், சிநேகா நடித்த

சின்னா
காட்சிகள் : 10.30, 2.30, 6.30, 9.30 (பு.நே)

## மாரீசன் கூடல் டொன் பொஸ்கோ இளைஞர் மன்ற வளர்ச்சி நிதிக்கான

## அதிஷ்டலாபச் சீட்டிழுப்பு முடிவுகள்

**1 ஆம் பரிசு இல : 01962**
**2 ஆம் பரிசு இல : 01411**
**3 ஆம் பரிசு இல : 00437**

ஆறுதல் பரிசில்கள்
1 ஆம் பரிசு இல : 00482
2 ஆம் பரிசு இல : 01123
3 ஆம் பரிசு இல : 00724
4 ஆம் பரிசு இல : 00094
5 ஆம் பரிசு இல : 00107

அதிஷ்டசாலிகள் உரிய ஆதாரங்களைச் சமர்ப்பித்து தமது பரிசில்களை 16.08.2005 இற்கு முன்பதாக வந்து பெற்றுக் கொள்ளுமாறு கேட்டுக் கொள்கிறோம்.

புனித டொன் பொஸ்கோ இளைஞர்மன்றம்,
மாரீசன் கூடல், இளவாலை.

(2009)

# பணிநிலை வேண்டுகை

கீழ்வரும் பணிநிலைகளுக்குத் தகைமையுடையவர்களிடமிருந்து வேண்டுகைகள் கோரப்படுகின்றன. தகைமையுடையவர்கள் தங்கள் தன்வரலாறடங்கிய (சுயவிபரம்) வேண்டுகைகளை 2005.08.13 ஆம் நாளுக்கு முன்னதாக எமக்குக் கிடைக்கக்கூடியவாறு அனுப்பிவைக்கவும்.

## பணிநிலை:

01. ஆய அலுவலர் (ஆண்கள்)
02. ஆய உதவியாளர்(ஆண்கள்)

## கல்வித்தகைமை:

பணிநிலை 01. க.பொ.த.(உ/த) பரீட்சையில் தேர்ச்சி பெற்றிருத்தல் வேண்டும்.

பணிநிலை 02. க.பொ.த.(சா/த)பரீட்சையில் குறைந்தது 04 பாடங்களில் தேர்ச்சியடைந்திருத்தல் வேண்டும்.

## வேண்டுகை அனுப்ப வேண்டிய முகவரி:

மேலாளர்,
ஆளணிப் பிரிவு,
நடுவப்பணியகம்,
ஆயம்.

## நேர்முகத் தேர்வு நடைபெறும் நாள்:

2005.08.16
காலை 10.00 மணிக்கு

## நேர்முகத் தேர்வு நடைபெறும் இடம்:


நடுவப்பணியகம்,
ஆயம்,
கிளிநொச்சி.

குறிப்பு:- நேர்முகத் தேர்வுக்குக்கடிதம் அனுப்பப்படமாட்டாது. நேர்முகத் தேர்வுக்குச் சமுகமளிப்பவர்கள் தகைமைச் சான்றிதழ்களுடன் வரவும்.

மேலாளர், ஆளணிப்பிரிவு, ஆயம்.

# மக்களின் வயிற்றிலடித்த அரசானது; வாக்குரிமையையும் பறிக்கின்றது!

## பொதுக்கூட்டத்தில் ரணில் ஆவேசம்



கொழும்பு—

கடந்த பொதுத்தேர்தலின்போது மக்களின் வயிற்றில் அடித்த ஜனாதிபதி சந்திரிகா தலைமையிலான கூட்டணி அரசு அத்துடன் நின்றுவிடாது, தற்போது மக்களின் வாக்களிக்கும் உரிமையையும் தட்டிப்பறிக்க முனைகிறது. அதற்கு ஒருபோதும் இடமளிக்கமுடியாது என்று ஐக்கிய தேசியக் கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்க தெரிவித்தார்.

பொலனறவையில் நடைபெற்ற ஜனாதிபதித் தேர்தல் பிரசாரக் கூட்டத்தில் உரையாற்றியபோதே - ஜனாதிபதி வேட்பாளர் ரணில் விக்கிரமசிங்க இவ்வாறு தெரிவித்தார்.

அவர் அங்கு உரை நிகழ்த்துகையில்:-

கஷ்டப்படும் மக்களுக்குச் சேவையாற்ற இந்த அரசாங்கத்திடம் எந்தவிதமான திட்டங்களோ, கொள்கைகளோ கிடையாது.

மக்களின் உரிமைகளைப் பறிப்பதற்கான முயற்சிகளுக்கு எதிராக மாபெரும் மக்கள் பேரணியினூடாக எச்சரிக்கை விடுக்கப்பட்ட போதிலும், அரசாங்கம் அதனை கவனத்தில் கொள்ளாது விட்டால் - 2005 .ஆம் ஆண்டு ஜனாதிபதித் தேர்தலை நடத்தக்கோரி மக்களை ஒன்று திரட்டவேண்டி ஏற்படும்.

ஐக்கிய தேசியக்கட்சி - விடுதலைப் புலிகளுடன் சமாதான உடன்படிக்கையில் கைச்சாத்திட்டு, யுத்தத்தை நிறுத்தியது. இதனால் பொலனறுவ, மட்டக்களப்பு, திருகோணமலை, அம்பாறை ஆகிய பிரதேசங்களில் தடைப்பட்டிருந்த விவசாய நடவடிக்கைகள் மீண்டும் ஆரம்பிக்கப்பட்டன என அவர் தெரிவித்தார்.

இதேவேளை, ஜனாதிபதித் தேர்தல் இந்த ஆண்டு நடத்தப்படவேண்டும் என்பதை வலியுறுத்தி, பொதுமக்களின் கையெழுத்துக்களைப் பெறும் நடவடிக்கைகள் நேற்றுமுன்தினம் காலை ஐக்கிய தேசியக் கட்சி தலைமையகமான, சிறிகொத்தாவில் ஆரம்பிக்கப்பட்டது.

இந்த மனுவில் முதலாவதாக ஐக்கிய தேசியக் கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்க கையெழுத்திட்டார். அதன் பின்னர் 4 வாகனங்களில் இந்த மனு - நான்கு திசைகளுக்கும் எடுத்துச் செல்லப்பட்டு 10 லட்சம் மக்களிடம் கையெழுத்துக்கள் பெறும் நடவடிக்கைகள் ஆரம்பமாகின.

10 லட்சம் மக்களின் கையெழுத்துக்களுடன் இந்த மனு எதிர்வரும் 24 ஆம் திகதி தேர்தல் ஆணையாளர் தயானந்த திஸநாயக்கவிடம் கையளிக்கப்படவுள்ளது. அத்துடன், இந்த ஆண்டினுள் ஜனாதிபதித் தேர்தல் நடத்தப்படுவதன் அவசியம் குறித்து மக்களுக்கு விளக்கமளிக்கும் வகையில் - துண்டுப்பிரசுரங்களை விநியோகிக்கவும், வீடுவீடாகச் சென்று மக்களைச் சந்திக்கவும் ஐக்கியதேசியக் கட்சி திட்டமிட்டுள்ளது.

## எதிர்வரும் 20 ஆம் திகதி புலமைப்பரிசில் பரீட்சை!

கொழும்பு—

2005 ஆம் ஆண்டுக்கான ஐந்தாம் ஆண்டு புலமைப்பரிசில் - பரீட்சை எதிர்வரும் 20 ஆம் திகதி சனிக்கிழமை நாடளாவிய ரீதியில் நடைபெறவுள்ளதாக - பரீட்சைகள் ஆணையாளர் அறிவித்துள்ளார். இந்தப் பரீட்சைக்கு 3 லட்சத்து 25 ஆயிரம் மாணவர்கள் தோற்றவுள்ளனர்.

## சமையல் வாயுவின் விலையை ஷெல் காஸ் குறைத்தது!

கொழும்பு—

ஷெல் காஸ் நிறுவனம் சமையல் எரிவாயுவின் விலையை குறைத்திருப்பதாக அறிவித்துள்ளது.

12.5 கிலோ எடைகொண்ட எல்.பி. சமையல் எரிவாயு சிலிண்டர் ஒன்றின் விலை 101 ரூபாவால் குறைக்கப்பட்டுள்ளது. இதன்படி 12.5 கிலோ கிராம் எடைகொண்ட எரிவாயு சிலிண்டர் ஒன்று கொழும்புப் பகுதியில் 793 ரூபாவுக்கு விற்பனை செய்யப்படும்.

கடந்த 5 ஆம் திகதி நள்ளிரவு முதல் புதிய விலை அமுலுக்குக் கொண்டு வரப்படவுள்ளதாக நிறுவனம் தெரிவித்துள்ளது. புதிய விலைமாற்றத்துக்கமைய 153 ரூபாவுக்கு விற்பனை செய்யப்பட்டு வந்த 2.3 கிலோகிராம் எடையுடைய சமையல் எரிவாயு சிலிண்டர் ஒன்றின் விலை 165 ரூபாவாகக் குறைந்துள்ளது.

இதேவேளை, தொழில்நுட்பம் மற்றும் வர்த்தக நடவடிக்கைகளுக்காகப் பயன்படுத்தப்படுகின்ற எரிவாயுவின் விலையும் குறைக்கப்பட்டுள்ளது. அண்மையில் எரிவாயுவுக்கான வற்வரி நீக்கப்பட்டதையடுத்தே இந்த விலைக்குறைப்பு செய்யப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

## பொலிஸாரின் தகவல் பரிமாற்றங்களை இடைமறித்துக்கேட்கக்கூடியதான நவீன தொடர்பு சாதனம் பிடிபட்டது!

கொழும்பு—

இலங்கையிலுள்ள அனைத்து பொலிஸ் நிலையங்களிலும் தகவல் பரிமாற்றங்களை இடைமறித்துக் கேட்கக்கூடிய அதிசக்திவாய்ந்த தொலைத்தொடர்பு சாதனம் ஒன்று உட்பட, சக்திவாய்ந்த மேலும் சில தொலைத்தொடர்பு சாதனங்களுடன் பன்னலையில் வைத்து இளைஞர் ஒருவர் கைதுசெய்யப்பட்டார்.

இந்தத் தொலைத்தொடர்பு சாதனத்தினூடாக மிகத்தெளிவாகப் பொலிஸாரின் தகவல் பரிமாற்றங்களை இடைமறித்துக் கேட்கக்கூடியதாக உள்ளதென குளியாப்பிட்டி சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் டபிள்யு.பி.தயாரத்ன தெரிவித்தார்.

சில வருடங்களுக்குமுன்னர் சவுதி அரேபியாவில் தொழில்புரிந்துவிட்டு நாடுதிரும்பிய இந்த இளைஞன், இலங்கைக்கு வருகையில் இதனைக் கொண்டு வந்ததாக விசாரணைகளின்போது தெரிய வந்துள்ளது.

அத்துடன் உலகிலுள்ள எந்தவொரு தொலைக்காட்சி சேவையையும் பார்வையிடக்கூடிய வகையிலான சாதனமொன்றும் -

200 மீற்றர் தூரத்துக்குள் தொலைக்காட்சியை செயலிழக்கச் செய்யக்கூடிய வகையிலான தூரக்கட்டுப்பாட்டு சாதனமொன்றும், கைதுசெய்யப்பட்ட இந்த இளைஞரிடமிருந்து கைப்பற்றப்பட்டன. சந்தேக நபரிடம் மேலதிக விசாரணைகள் மேற்கொள்ளப்பட்டுவருகின்றன. (01)

## காத்தான்குடியில் ஆர்ப்பாட்டம் நடுவீதியில் வைத்து சமையல்!



மட்டக்களப்பு—

மட்டக்களப்பு மாவட்டம் காத்தான்குடி பிரதேசத்தில் சுனாமியால் தமது இருப்பிடங்களை இழந்த குடியிருப்பாளர்கள் நேற்றுமுன்தினம் முழுநாளும் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

மாரிமழை பெய்யமுன்பு தங்களுக்குரிய நிரந்தர வீடுகளை அரசாங்கம் அமைத்துத் தரவேண்டும் என்றுகோரி நடத்தப்பட்ட இந்த ஆர்ப்பாட்டத்தில் - நூற்றுக்கும் மேற்பட்டவர்கள் கலந்துகொண்டனர். இடைத்தங்கல் முகாம்களிலும், தற்காலிக குடியிருப்புகளிலுமிருந்து நேற்றுமுன்தினம் காலை வெளியேறிய ஆர்ப்பாட்டகாரர்கள், அக்பர் பள்ளிவாசலைச் சென்றடைந்து, அங்கிருந்து பிரதேச செயலகம்வரை பேரணியொன்றை நடத்தினர்.

பிரதேச செயலக முன்றலில் நேற்றுமுன்தினம் பகல்முழுவதும் இவர்கள் அமர்ந்துகொண்டதால் செயலகம் இயங்கவில்லை. பிரதான வீதியில் கூடாரங்களை அமைத்து அடுப்புகளைமூட்டி சமையலிலும் இவர்கள் ஈடுபட்டிருந்தமையால், அந்தவழியால் இடம்பெற்றுவந்த வீதிப்போக்குவரத்துச் சேவைகளும் தடைப்பட்டிருந்தன.

## ஹெல உறுமயவின் மனுவால் தேர்தல் அறிவிப்பு தாமதமாகும்!

கொழும்பு—

ஜனாதிபதித் தேர்தல் குறித்த அறிவிப்பைத் தேர்தல் ஆணையாளர் வெளியிடுவதற்கு ஜாதிக ஹெல உறுமயவின் சார்பில் உயர்நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டுள்ள மனு, இடையூறாக இருப்பதாகத் தெரியவருகிறது.

எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தல் நடைபெறும் திகதி தொடர்பாக அறிவிக்கக் கோரி, ஜாதிக ஹெல உறுமயவின் நாடாளுமன்ற உறுப்பினர் ஓமல்பே சோபிததேரர் - உயர்நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ள அடிப்படை உரிமை மீறல் மனுவில் தேர்தல் ஆணையாளர் தயானந்த திஸநாயக்கவும் பிரதிவாதியாகக் குறிப்பிடப்பட்டிருக்கிறார்.

இதனால், ஜனாதிபதித் தேர்தல் குறித்து உத்தியோகபூர்வமாக அறிவித்தலை வெளியிடமுடியாதநிலையில் தயானந்த திஸநாயக்க இருப்பதாக, தேர்தல் திணைக்களம் தெரவித்துள்ளது.

இதுகுறித்த தேர்தல் திண்ணக்களத் தகவல்களின்படி, ஜனாதிபதி தேர்தல் குறித்த உத்தியோகபூர்வ அறிவிப்பை எதிர்வரும் 22 ஆம் திகதி அல்லது அதற்குப் பிந்திய ஒரு திகதியில் வெளியிடுவதற்குத் தீர்மானிக்கப்பட்டிருந்தது.

உத்தியோகபூர்வ அறிவிப்பு வெளியிடப்படும் தினத்திலிருந்து, 16 தொடக்கம்- 21 நாட்களுக்கிடையிலான ஒரு திகதியில் வேட்புமனுக்களை ஏற்றுக்கொள்ள தேர்தல் ஆணையாளர் தயாராக இருந்தார்.

வேட்புமனுக்களை ஏற்ற நாளிலிருந்து 4 தொடக்கம் ஆறு வாரங்களுக்கிடையே உள்ள ஒரு திகதியில் ஜனாதிபதித் தேர்தலை நடத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்ததாகவும், தேர்தல் திணைக்களத்தின் சிரேஷ்ட அதிகாரி ஒருவர் தெரிவித்தார். (தே)

## வன்னி - கிழக்குக்கு இடையே பயணிக்கும் போராளிகளுக்கு பாதுகாப்பாக படையினரும் பயணம் செய்வர்!

### நடவடிக்கை எடுக்க அரசாங்கம் உத்தரவு

கொழும்பு—

வன்னியிலிருந்து கிழக்குப் பகுதிக்கு - இராணுவக் கட்டுப்பாட்டுப் பிரதேசங்களினூடாகப் பயணத்தை மேற்கொள்ளும் விடுதலைப் புலிகளுடன், ஒரே வாகனத்தில் படையினரும் பயணம்செய்வதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு -இராணுவ அதிகாரிகளுக்கு அரசாங்கம் உத்தரவிட்டிருப்பதாகக் கூறப்படுகிறது.

விடுதலைப் புலிகள் பயணிக்கும் வாகனங்களில் எத்தனை உறுப்பினர்கள் பயணம் செய்கின்றனர் என்பதற்கேற்ப, வழித்துணையாகப் பயணிக்கும் படை அதிகாரிகளினதும் சிப்பாய்களினதும் எண்ணிக்கையும் அமையும்.

இராணுவக் கட்டுப்பாட்டுப் பிரதேசங்களினூடாகப் பயணிக்கையில், விடுதலைப் புலிகளுக்கு பாதுகாப்பு வழங்குவதற்காக அவர்கள் பயணிக்கும் வாகனங்களில் படையினரும் பயணிக்க ஏற்பாடு செய்யப்படவேண்டுமென - விடுதலைப் புலிகள் விடுத்த வேண்டுகோளுக்கு அமையவே இந்த ஏற்பாடுகள் செய்யப்பட்டிருப்பதாகப் பாதுகாப்பு வட்டாரங்கள் தெரிவித்தன.

இரண்டு மாதங்களுக்கு முன்னர் வெலிக்கந்த பிரதேசத்தில் விடுதலைப் புலிகளின் போராளிகள் பயணித்த வாகனம், கண்ணிவெடித் தாக்குதலுக்கு இலக்கானத்தையடுத்து விடுதலைப் புலிகளின் அரசியற்துறைப் பொறுப்பாளர் சு.ப. தமிழ்ச்செல்வன் - யுத்தநிறுத்தக் கண்காணிப்புக்குழு ஊடாக இந்தக் கோரிக்கையை விடுத்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (கே)

## திருகோணமலையில் படைவிலகல் தாமதமாகவே மேற்கொள்ளப்படும்!

### கடற்படைத் தளபதி தெரிவிப்பு

திருகோணமலை—

திருகோணமலையில் ஜே.வி.பியின் அலுவலகம் தாக்கப்பட்ட சம்பவம் காரணமாக - ஏற்கனவே உறுதியளித்தபடி படையினரின் ஒரு பகுதியினரை அகற்றுவதில் பின்னடைவு ஏற்பட்டிருப்பதாகவும், இன்னும் சில தினங்களில் அகற்றுவதற்கு நடவடிக்கை எடுப்பதாகவும் - கிழக்கு பிராந்திய கடற்படைத் தளபதி ரியர் அட்மிரல் வசந்த கரன்னகொட தெரிவித்தார்.

திருகோணமலை மாவட்ட போர்நிறுத்தக் கண்காணிப்புக்குழுவின் தலைவர் ஆர்தர் டேவிட்டன் - தமிழ் மக்கள் பேரவைத் தலைவர்விக்னேஸ்வரனை அழைத்து, தனது அலுவலகத்தில் நடத்திய சந்திப்பின்போதே கடற்படைத் தளபதி கூறிய தகவலைத் தெரிவித்தார்.


திருகோணமலையில் புத்தர் சிலை விவகாரம், அதன்பின்னர் விடுதலைப் புலிகளின் கடற்புலிகளின் தளபதி சுட்டுக் கொல்லப்பட்ட சம்பவம் என்பனவற்றின் பின்னர் ஏற்பட்ட பதற்றநிலையைத் தணிப்பதற்காக திருகோணமலையில் பெருமளவான படையினரும், பொலிஸாரும் குவிக்கப்பட்டிருந்தனர். இவர்களில் மூன்றில் ஒரு பகுதியினரை சில தினங்களில் அகற்றுவதாக கிழக்குப் பிராந்திய கடற்படைத் தளபதி ரியல் அட்மிரல் வசந்த கரன்னகொட உறுதியளித்திருந்தார்.

எனினும், கடந்த ஞாயிற்றுக்கிழமை திருகோணமலை கந்தளாயில் ஜே.வி.பி அலுவலகம்மீது குண்டுத்தாக்குதல் நடத்தப்பட்டிருப்பதாலும், அவர்கள் ஆர்ப்பாட்டப் பேரணி நடத்துவதற்கு ஏற்பாடு செய்திருப்பதனாலும் படையினரை உடனடியாக அகற்றுவதில் தாமதம் ஏற்பட்டுள்ளது என்றும் -

அவர்களைச் சில தினங்களில் அகற்றுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருப்பதாகவும், கடற்படைத் தளபதி தெரிவித்ததாக - போர்நிறுத்தக் கண்காணிப்புக்குழுவின் திருமலை மாவட்டத் தலைவர் ஆர்தர் டேவிட்டன் தெரிவித்தார்.

திருகோணமலை நகரின் மையப் பகுதியில் உள்ள சண்முக வித்தியாலயத்தை அண்டிய பகுதி மற்றும் சிறிமாபுரம் பகுதியில் அமைக்கப்பட்ட தற்காலிக இராணுவச் சாவடியை அகற்றுவதற்கு, மாவட்டக் கடற்படைத் தளபதி இணக்கம் தெரிவித்திருப்பதாகவும், போர்நிறுத்தக் கண்காணிப்புக் குழுவின் தலைவர் தெரிவித்த..ர். (10,4)

# அணு ஆயுதத் தயாரிப்பு பணி ஆரம்பமென ஈரான் அறிவிப்பு!



இஸ்ஃபஹான் —

ஈரான் - யுரேனியத்தை எரிபொருளாக மாற்றும் பணியை, இஸ்ஃபஹான் என்ற இடத்தில் உள்ள தனது அணு நிலையத்தில் நேற்று முன்தினம் திங்கட்கிழமை தொடங்கிவிட்டது.

இதை ஈரானிய அணுவிசை ஏஜென்சியின் துணைத்தலைவர் முகம்மது சைதி நிருபர்களிடம் திங்கட்கிழமை அறிவித்தார். சர்வதேச அணுவிசை ஏஜென்சியின் முன்னிலையில் இந்தப் பணியை மீண்டும் தாங்கள் தொடங்கிவிட்டதாக அவர் அறிவித்தார்.

இதன் மூலம் அமெரிக்கா, பிரிட்டன், பிரான்ஸ், ஜெர்மனி உள்ளிட்ட மேற்கத்தேய நாடுகளுடன் மோதலுக்கு தாங்கள் தயாராகி விட்டதை ஈரான் உணர்த்தியிருக்கிறது.

ஈராக்கில் அணு குண்டுகள் தயாரிக்கப்பட்டு மறைத்து வைக்கப்பட்டுள்ளன, உயிரழிவு ஆயுதங்கள் உள்ளன என்றெல்லாம் கூறி அதன்மீது படையெடுத்த அமெரிக்காவும், அதன் தோழமை நாடுகளும், அடுத்து ஈரான் மீது குற்றஞ் சாட்டி வருகின்றன. அணுகுண்டு தயாரிப்பில் ஈரான் ஈடுபடவிருக்கிறது என்று அவை சாடின. ஈரானுக் கான உதவிகளை ஐரோப்பிய நாடுகள் நிறுத்த வேண்டுமென்று அவை வலியுறுத்தியுள்ளன.

இந்த நிலையில் ஈரானே முன்வந்து, யுரேனியத்தை எரிபொருளாக மாற்றும் வேலையை மீண்டும் தொடங்கிவிட்டதாக அறிவித்துள்ளது. இது ஐரோப்பிய நாடுகளைச் சீண்டும் முயற்சியாகக் கருதவும் இடமுண்டு. செறிவூட்டலுக்கான வாயுவைத் தயாரிக்க யுரேனியம் பயன்படுத்தப்படும் என்று தெரிவிக்கப்படுகிறது.

அணுகுண்டுத் தயாரிப்பில் ஈடுபடவேண்டாமென்று அமெரிக்காவும், ஐரோப்பிய நாடுகளும் கடந்த 9 மாதங்களாக ஈரானை எச்சரித்து வருகின்றன. இப்போது ஈரான் இந்த அறிவிப்பை வெளியிட்டிருப்பதால் சர்வதேச அணுவிசை ஏஜென்சியின் அவசரகூட்டம் நேற்று நடைபெற்றது.

ஈரானின் புதிய அதிபராக மகமூத் அகமதி நிஜாத் கடந்தவாரம் பதவியேற்றார். அவர் ஈரானின் அணுவிசை அமைப்பின் தலைவராக அலி லாரிஜானி என்பவரை நியமித்திருக்கிறார். அவர் விரைவிலேயே பதவியேற்கவிருக்கிறார். ஈரானின் அணு ஆயுதநோக்கம் குறித்து மேற்கத்தேய நாடுகள் தகவல்கள் கேட்டபோதெல்லாம் ஏதும் கூறாமல் பிடிவாதமாக மறுத்து வந்தவர் லாரிஜானி. அவர் இதற்கு முன்னர் அரச பத்திரிகை தொடர்பாளராக இருந்தார்.

கடந்த நவம்பர் மாதம் நடந்த பேச்சின்போது கூட, அணுவிசை தயாரிப்பு திட்டத்தை நிறுத்தி வைக்க ஈரான் முன்வந்தது. புதிய அதிபர் பதவியேற்புக்குப் பிறகு நிலைமை மாறிவிட்டது.

## காஸாவிலுள்ள யூதக் குடியேற்ற வாசிகளை வெளியேறுமாறு இஸ்ரேல் அரசு அறிவிப்பு



காஸா பகுதியிலுள்ள யூதக் குடியேற்ற வாசிகளை அங்கிருந்து வெளியேறுமாறும், அவ்வாறு வெளியேற மறுப்பவர்கள் வலுக்கட்டாயமாக வெளியேற்றப்படுவார்கள் என இஸ்ரேல் இராணுவம் அறிவித்துள்ளது.

அந்தப் பிரதேசங்களில் எதிர்வரும் 15 ஆம் திகதிக்குப் பின்னர் வசிப்பவர்கள் சட்டரீதியற்ற வகையில் உள்ளனர் எனத் தெரிவித்து நடவடிக்கை எடுக்கப்படும் எனவும் அறிவிக்கப்பட்டுள்ளது. இதேவேளை, காஸா பகுதியிலிருந்து யூதக் குடியிருப்பாளர்களை அகற்றுவதற்கு எதிர்ப்புத் தெரிவித்து இஸ்ரேலிய இராணுவத்திலிருந்து 9 பேர் ஆயுதங்களுடன் தப்பிச் சென்றதாக இஸ்ரேலிய பாதுகாப்பு அமைச்சக அதிகாரிகள் தெரிவித்தனர்.

இவ்வாறு தப்பிச் சென்றவர்களைக் கண்டு பிடிக்கும் நடவடிக்கையில் இஸ்ரேல் இராணுவம் ஈடுபட்டுள்ளது.

## பெண்கள், குழந்தைகளைப் பயன்படுத்தி லண்டனில் தாக்குதல் நடத்த தீவிரவாதிகள் திட்டமென தகவல்

லண்டன் —

சோதனையும், கண்காணிப்பும் தீவிரப் படுத்தப்பட்டிருப்பதால் பயங்கரவாதிகள் தங்கள் பாணியை மாற்றி பெண்கள், குழந்தைகளை மனித வெடிகுண்டாகப் பயன்படுத்தி லண்டனில் தாக்குதல் நடத்தக்கூடும் என்று அச்சம் ஏற்பட்டுள்ளது.

லண்டனில் நிகழ்ந்த குண்டுவெடிப்புச் சம்பவத்தையடுத்து பாதுகாப்பு கருதி தடுத்து நிறுத்தி சோதனையிடு என்ற நடைமுறையின் கீழ், லண்டன் பொலிஸார் தீவிர சோதனை மற்றும் கண்காணிப்பில் ஈடுபட்டுள்ளனர். இந்த நடவடிக்கையால் பயங்கரவாதிகள் தங்கள் தாக்குதல் உத்தியை மாற்றக்கூடும் என்று பொலிஸார் கருதுகின்றனர்.

இதன்படி அவர்கள் பொது இடங்களில் தாக்குதல் நடத்துவதற்கு பெண்களையும், குழந்தைகளையும் பயன்படுத்த வாய்ப்பு இருக்கிறது என்று சண்டே ரைம்ஸ் பத்திரிகை தகவல் வெளியிட்டுள்ளது. இந்தச் சவாலை எப்படி சமாளிப்பது என்ற கவலை இப்போதே பொலிஸாருக்கு வந்துவிட்டது.

இதனிடையே லண்டன் குண்டுவெடிப்பு சம்பவத்துக்கு பிறகு ஆசியர்கள், கறுப்பர்களை அடையாளம் கண்டு பொலிஸார் சோதனையிடுவது அதிகரித்துள்ளது.

இதனால் ஏற்பட்டுள்ள அதிருப்தியை சமாளிக்கும் விதமாக லண் டன் மாநகர பொலிஸ் ஆணையாளர் சேர் இயன் பிளேயர் புதிய நடைமுறை விதியை கடந்தவார இறுதியில் வெளியிட்டுள்ளார்.

இதன்படி இனங்கண்டு சோதனையிடுவதை பொலிஸார் தவிர்க்கவேண்டும் என்று அறிவுறுத்தப்பட்டுள்ளது.

## உலக நோக்கு

## நேபாளத்தில் இராணுவ முகாம் மீது மாவோ கிளர்ச்சிவாதிகள் தாக்குதல்; 150ற்கும் மேல் இராணுவத்தினர் பலி!



காத்மண்டு —

நேபாளத்தின், வடமேற்கு பகுதியிலுள்ள இராணுவ முகாம் மீது மாவோ கிளர்ச்சிவாதிகள் நடத்திய தாக்குதலில் 100 படையினரைக் காணவில்லையெனவும், இவர்களைக் கண்டுபிடிக்க மேலதிக படையினர் அப்பகுதிக்கு அனுப்பப்பட்டுள்ளதாகவும் நேபாள இராணுவம் தெரிவித்துள்ளது.

இந்த இராணுவ முகாம், இந்தப் பகுதியில் வீதித்திருத்த வேலைகளில் ஈடுபடும் தொழிலாளர்களுக்கு பாதுகாப்பு வழங்குவதற்காக அமைக்கப்பட்டது. இவ்வாறு அமைக்கப்பட்ட இந்த இராணுவ முகாம் கடந்த ஞாயிற்றுக்கிழமை மாவோ கிளர்ச்சிவாதிகளால் தாக்கப்பட்டது. இரண்டு பகுதியினருக்குமிடையே சுமார் 11 மணி நேரம் வரை மோதல் இடம்பெற்றதாக தெரிவிக்கப்படுகிறது.

மாவோ கிளர்ச்சிவாதிகளின் தகவலின்படி, தாக்குதலில் 150 படையினர் கொல்லப்பட்டதுடன், 50 படையினர் சிறைப்பிடிக்கப்பட்டனர். அத்துடன், தமது தரப்பில் 26 பேர் உயிரிழந்ததாகவும் அறிவித்துள்ளனர்.

ஆனால், மாவோ கிளர்ச்சிவாதிகளின் தகவலின்படி 150 படையினர் கொல்லப்பட்டதென்ற செய்தியை தாம் மறுப்பதாக நேபாள இராணுவப் பேச்சாளர் பிரிகேடியர் ஜெனரல் தீபக் குறூங் தெரிவித்தார். தமது தரப்பில் ஒரு படைவீரரே உயிரிழந்துள்ளதாக இராணுவம் தெரிவித்துள்ளது.

ஆனால், நேபாள இராணுவத்தின் பெயர் குறிப்பிடவிரும்பாத அதிகாரியொருவர் ஏ.எப்.பி செய்தி நிறுவனத்திற்கு தெரிவிக்கையில் -

புதிதாக அமைக்கப்பட்ட முகாமில் 227 படையினர் இருந்ததாகவும், இந்தத் தாக்குதலுக்குப் பின்னர் 81 பேரே உள்ளதாகவும் குறிப்பிட்டார். இவ்வாறு காணாமற்போன படையினருடன் எவ்வித தொடர்பும் இல்லையெனவும் அவர் தெரிவித்தார்.

பிந்திய தகவலின்படி காணாமற்போன படையினரின் 40 பேரின் உடல்கள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளதாகவும், இன்னும் 70 படையினரைக் காணவில்லை எனவும், படையினர் மீது மாவோ கிளர்ச்சிவாதிகள் நடத்திய தாக்குதல் சர்வதேச சட்டத்திற்கு முரணானதெனவும் நேபாள இராணுவம் தெரிவித்துள்ளது.

## எயிட்ஸ் பீடித்த மாணவி குழந்தை பெற்றெடுப்பு

லண்டன் —

உலகம் முழுவதும் எயிட்ஸ் நோய் வேகமாகப் பரவி வருகிறது. ஆபிரிக்க நாடுகள்தான் இதில் முதலிடத்தில் உள்ளன. என்றாலும் மேற்கத்தேய நாடுகளும், வளர்ந்த நாடுகளும் இதற்கு விதிவிலக்கல்ல.

இங்கிலாந்து இளைஞர்களிடம் இது வேகமாகப் பரவி வருகிறது. இங்கிலாந்தின் சுவாம் பகுதியைச் சேர்ந்த பதினைந்து வயது மாணவி திடீரென்று கர்ப்பமடைந்தார். ஆனால், அவர் வயிற்றில் வளரும் குழந்தைக்குத் தகப்பன் யார் என்பதுதான் அவருக்குத் தெரியவில்லை. ஏற்கனவே ஒரு வாலிபனைக் காதலித்துவிட்டு இன்னொரு வாலிபனுடன் அவர் நெருங்கிப் பழகி வந்தார்.

மருத்துவ பரிசோதனைக்காக வைத்தியசாலைக்குச் சென்ற கர்ப்பிணி மாணவிக்கு இன்னொரு அதிர்ச்சி காத்திருந்தது. அந்த மாணவியின் இரத்தத்தில் எச்.ஐ.வி கிருமிகள் பரவியிருந்தது தெரியவந்துள்ளது. எயிட்ஸ் கிருமிகள் பாதித்த அந்த மாணவிக்கு டொக்டர்கள் தொடர்ந்து சிகிச்சை அளித்து வந்தனர்.


இந்த நிலையில் அந்த மாணவிக்கு அழகான குழந்தை பிறந்தது. ஆனால் அந்தக் குழந்தைக்கு மருத்துவப் பரிசோதனை நடத்தியதில் குழந்தைக்கு எயிட்ஸ் பாதிப்பு எதுவும் இல்லை என்பது கண்டுபிடிக்கப்பட்டது.

ஆனால், அந்தக் குழந்தைக்கு மாணவி தாய்ப்பால் கொடுக்கவேண்டாம் என்றும், தாய்ப்பால் கொடுத்தால் அதன் மூலம் குழந்தைக்கு எயிட்ஸ் பரவும் வாய்ப்பு உள்ளதாகவும் டொக்டர்கள் எச்சரிக்கை விடுத்தனர்.


பிரேசில் நாட்டின் சியாரா நகரில் உள்ள சென்டிரல் வங்கி கொள்ளையடிக்கப்பட்டது. அங்கிருந்த லொக்கரில் இருந்து 322 கோடி ரூபாவை கொள்ளையர்கள் கட்டுக்கட்டாக எடுத்துச் சென்றுள்ளனர். வங்கியை காலையில் திறந்துபார்த்தபோதுதான் கொள்ளை நடந்தது தெரியவந்தது. வங்கிவரை 200 மீற்றர் தூரத்துக்கு சுரங்கம் தோண்டி இந்த கொள்ளையை வெற்றிகரமாக நடத்தி உள்ளனர். அந்த சுரங்கத்துக்குள் இருந்த ஏணி மூலம் பொலிஸார் இறங்கி சோதனை இடும் காட்சி.



## 'டிஸ்கவரி' தரை இறங்குவது எப்படி?




'டிஸ்கவரி' தரை இறங்க தயாராவதற்கு முன், பல்வேறு சிக்கலான நடைமுறைகளுக்கு உள்ளாக்கப்படும். டிஸ்கவரி பூமிக்கு திரும்பும் நிகழ்ச்சியின் ஒவ்வொரு கட்டமும் இங்கு விவரிக்கப்படுகிறது.



1. விண்கலத்தில் வெப்பம் பரவு வதை கட்டுப்பாட்டுக்குள் வைக்க தலைகீழாக விண்கலம் பறக்கத் தொடங்கும்.

2. வளிமண்டலத்துக்குள் நுழையும் முன்பு டிஸ்கவரியின் பின்புறம் முதலில் இருக்குமாறு 180 டிகிரி திரும்பும். இன்ஜின் இயக்கப்பட்டு டிஸ்கவரியின் வேகம் கட்டுப்படுத்தப்படும்.

3. வளிமண்டலத்தில் நுழையும் போது வலப்புறமாக மேல்நோக்கி டிஸ்கவரி எழும். பின்பு, டிஸ்கவரியின் இறக்கையின் மட்டத்தில் 40 டிகிரி கோணத்தில் மேலாக டிஸ்கவரி எழுந்து வளிமண்டலத்தின் மேல் அடுக்கின் ஊடாக டிஸ்கவரி நுழையும். (இதில் தவறு ஏற்படும் பட்சத்தில் விண்கலம் எரிந்து சாம்பலாகிவிடும். விண்ணிலிருந்து பூமியை நோக்கி வரும் விண்கற்கள் இந்த பகுதியில் நுழையும் போது. குறிப்பிட்ட கோணத்தில் இல்லாததால் எரிந்து சம்பலாகி விடுகின்றன.)

4. பூமியை நோக்கி திரும்பும் போது. வளி மண்டலத்துடன் ஏற்படும் உராய்வின் காரணமாக, டிஸ்கவரி தீப்பிழம்பாக காட்சி அளிக்கும். (மணிக்கு 15 ஆயிரம் முதல் 17 ஆயிரம் மைல் வேகத்தில் பறக்கும் போது வெப்பம் 1,650 டிகிரி செல்சியஸ் வரை பரவும்.) இந்த வெப்பத்தை டிஸ்கவரியின் அடிப்பகுதியில் பதிக்கப்பட்டுள்ள செராமிக் ஓடுகள் தாங்கிக்கொள்ளும்.

5. பூமியை நெருங்கிய பின்னர், வேகம் குறைக்கப்பட்டு. இறக்கை மற்றும் வால்பகுதியைப் பயன்படுத்தி ஒரு விமானத்தைப் போல் பறக்கத் தொடங்கும். தரை இறங்குவதற்கு முன்பு மீண்டும் வேகம் குறைக்கப்படும்.

6. தரை இறங்குவதற்கு முன்பாக, 360 கி.மீ.. உயரத்திலிருந்து நொடிக்கு 10 ஆயிரத்து 208 மைல் வேகத்தில் 19 டிகிரி கோணத்தில் தரையை நோக்கி - கீழே விழுவது போன்ற வேகத்தில் - திடீரென இறங்கும். இது போன்று வேறு எந்த வர்த்தக விமானங்களும் தரை இறங்க முடியாது. பூமிக்குள் நுழையும் போதிலிருந்து தரை இறங்குவது வரை பூமி உருண்டையின் பாதித் தூரத்தை கடந்து வந்து கடைசியாக டிஸ்கவரி நிற்கும்.

12. வெற்றிடங்களுக்குப் பொருத்தமான விடையை எழுதுக.

1) இருண்ட இடத்தில் இருந்த தாவரம் மஞ்சள் நிறமாக மாறியது. இவ்வாறு நிகழ்வதற்கு................ இல்லாமையே காரணமாகும்.
2) பிளாஸ்டிக் பொருட்கள் சூழலை மாசடையச் செய்கின்றன. இவ்வாறு நிகழ்வதற்குப் பிளாஸ்டிக் பொருட்கள் ................ என்பதே காரணமாகும்.

13. ஒவ்வொரு வினாவுக்குரிய சரியான விடையைப் புள்ளிக் கோட்டின் மீது எழுதுக.

1) ஆசிரியை 618 வர்ணச் சுண்ணக்கட்டிகளை ஆறு வகுப்புக்களுக்கு சமமாகப் பகிர்ந்தளித்தார். ஒரு வகுப்புக்குக் கிடைத்த வர்ணச் சுண்ணக் கட்டிகள் எத்தனை?
2) ஒரு மாம்பழத்தின் விலை ரூபாய் 9 எனின், 18மாம் பழங்களின் விலை எவ்வளவு?
3) சிவப்பு நிற வாளியில் 6l 200 ml நீர் உள்ளது. அதிலிருந்து 3l 480ml நீர் நீல வாளியில் ஊற்றப்பட்டது. சிவப்பு நிற வாளியில் மீதியாக உள்ள நீரின் அளவு யாது?
4) உருவில் 0.7 ஐ நிழற்றுக.
5) ஒன்பதாயிரத்து தொள்ளாயிரத்து தொண்ணூற்று ஒன்பது என்பதனை இலக்கத்தில் எழுதுக.........
6) முற்பகல் 7.30 முதல் பிற்பகல் 5.15 வரையுள்ள காலம் எவ்வளவு?
7) 1/5இற்குச் சமமான பின்னம் யாது?
8) இக் கம்பி வலையில் ஒரு அடைப்பின் நீளம் 6 கட்டங்களும் அகலம் 3 கட்டங்களும் கொண்ட ஒரு செவ்வக வடிவத்தை வரைந்து நிழற்றுக.
9) எண் ஒன்றை நினைத்தேன். அதனை 7 ஆல் வகுதத போது விடை 9 ஆகும். நான் நினைத்த எண் யாது?........

14. இராமநாதன் இந்து மகளிர் வித்தியாலயத்திலிருந்து போட்டிப் பரீட்சையில் பங்கு பற்றிய நான்கு மாணவர்கள் மூன்று பாடங்களில் பெற்ற புள்ளிகள் பின்வரும் அட்டவணையில் காணப்படுகின்றன.

| மாணவர் பெயர் | பாடங்கள் | | |
|---|---|---|---|
| | தமிழ் | கணிதம் | சுற்றாடல் |
| மீரா | 90 | 75 | 85 |
| கலா | 5 | ... | 85 |
| மேனுகா | 75 | 65 | 50 |
| கண்ணன் | 80 | 78 | 95 |

1) மேனுகா மூன்று பாடங்களிலும் பெற்ற மொத்தப் புள்ளி யாது?
2) தமிழில் நான்கு மாணவர்களும் பெற்ற மொத்தப் புள்ளி யாது?
3) இப்போட்டிப் பரீட்சையில் கலா மூன்று பாடங்களிலும் பெற்ற மொத்தப் புள்ளிகளின் கூட்டுத்தொகை 195 ஆயின், கணித பாடத்தில் பெற்ற புள்ளி யாது?
4) கண்ணன் மூன்று பாடங்களிலும் எடுத்த மொத்தப் புள்ளிகளின் எண்ணிக்கைக்கும் அபிராமி மூன்று பாடங்களிலும் எடுத்த மொத்தப்புள்ளிகளின் எண்ணிக்கைக்குமிடையிலான வித்தியாசம் யாது?
5) சுற்றாடலில் இம்மாணவர் பெற்றுள்ள மொத்தப் புள்ளிகளை பங்குபற்றிய மாணவர்களின் தொகையால் வகுத்தால் கிடைக்கும் பெறுமானம் யாது?
6) இப்போட்டிப் பரீட்சையில் பங்குபற்றி வெற்றி பெற்ற மொத்தப் புள்ளிகளின் படி முதலாம் இரண்டாம் மூன்றாம் இடங்களைப் பெற்ற மாணவர்களின் பெயர் களைக் குறிப்பிடுக.
7) கணிதப் பாடத்தில் கூடிய புள்ளியையும் குறைந்த புள்ளியையும் பெற்றவர்களின் பெயர்களை எழுதுக.

15. நான் கண்ட எமது பாடசாலை விளையாட்டுப் போட்டி எனும் தலைப்பின் கீழ் ஆறு வாக்கியங்கள் எழுதுக. ஒவ்வொரு வாக்கியத்திலும் நான்கு சொற்களாவது இடம் பெறுவதுடன் அவ்வாக்கியத்தின் எழுவாய், பயனிலை ஆகியவையும் திருத்தமான முறையில் அமைந்திருத்தல் வேண்டும்.

1) ........................................
2) ........................................
3) ........................................
4) ........................................
5) ........................................
6) ........................................

T. அம்பிகைபாகன் B.Ed Tamil Sp.Trd
ஆசிரிய ஆலோசகர் மேல்மாகாணம்



# மாணவர் மலர்

# வினாத்தாள் 01

மாணவர்களை பாடசாலைக்கு தேர்ந்தெடுப்பதற்கும், உதவிப்பணம் வழங்குவதற்குமாக தரம் 5 மாணவர்களுக்கு நடத்தப்படும் மாதிரிப் பரீட்சை வினாத்தாள் - 2005

* பின்வரும் வினாக்களில் தரப்பட்டுள்ள சொற்களுக்கு மிகப் பொருத்தமான உரு எது?

01. விசித்திர மிருகம் - முகம் கூரானது - முன்னங்கால்கள் பின்னங்கால்களை விடக் குறுகியவை



1) 2) 3)

02. ✣ சிறகுகளுக்குப் பதிலாக ரோமங்கள் உண்டு.
✣ பூனையைப் போல் கத்தும் நாயைப் போல் உறுமும்
✣ மரத்தின் மேல் கூடுகட்டாது பள்ளம் தோண்டி முட்டையிடும்.



1) 2) 3)

* வாக்கியங்களில் மிகச் சரியான கருத்துள்ள வாக்கியத்தின் கீழ்க் கோடிடுக.

03.
1) கொதித்து ஆறாத நீரைக் குடிப்பதால் நோய் இல்லாது வாழலாம்.
2) கொதித்து ஆறிய நீரைக் குடிப்பதால் நோய் இல்லாது வாழலாம்.
3) கொதித்து ஆறிய நீரைக் குடிக்காது நோய் இல்லாது வாழலாம்.

04.
1) குஞ்சுகள் ஒன்றாக உணவைத் தேடிக்கொண்டு வந்து குருவிகளுக்கு ஊட்டின.
2) குருவிகளும், குஞ்சுகளும் உணவைத் தேடிக் கொண்டு வந்து ஊட்டின.
3) குருவிகள் ஒன்றாக உணவைத் தேடிக் கொண்டு வந்து குஞ்சுகளுக்கு ஊட்டின.

05. அடைமொழியாக வரத்தக்க சொற்களைக் குறிக்கும் விடையின் கீழ் கோடிடுக.
1) உண்பேன், ஓடியது, அழுது
2) இல்லை, எனது, மட்டும்
3) நீண்ட, சிறிய, பருத்த

06. பெயர்ச்சொல்லாக வாக்கியங்களில் வரத்தக்க சொற்களின் கீழ்க் கோடிடுக.
1) பதார்த்தம், மாரி, தண்டுகள்
2) இட்டது, போகுது, மலர்ந்தது
3) விரைவாக, கறுப்பு, எனது

07. வெற்றிடத்துக்குப் பொருத்தமான எண்ணைத் தரப்பட்டுள்ளவற்றிலிருந்து தெரிவு செய்க.

544 → 445   872 → 278   694 → ?

1) 649   2) 946   3) 496

08) வெற்றிடத்துக்குப் பொருத்தமான எழுத்துக்களைத் தரப்பட்டுள்ளவற்றிலிருந்து தெரிவு செய்க.

AAAA → BBBB   AAAB → BBBA   AABB → ?


1) BBAA   2) AABB   3) ABAB

09. ஆறுகளும், அருவிகளும் பல பிரதேசங்களில் வற்றிக் கொண்டு போகின்றன. இதற்குரிய காரணம்.
1) மக்கள் தமது தேவைக்கு அதிகமாக நீரைப் பயன்படுத்துவதால்
2) மக்கள் அதிகமாக விவசாயத்துக்கு நீரைப் பயன்படுத்துவதால்
3) மக்கள் தொடர்ந்து மரங்களை வெட்டி வீழ்த்தி வருவதால்


10. பிள்ளைகள் முத்தோர் சொற் கேட்க வேண்டும். இதற்குரிய காரணம் -
1) முத்தோர் பிள்ளைகளை விட வயது கூடியவர்கள் ஆகையால்
2) பிள்ளைகள் நல்லவை தீயவை எவை என அறியாதவர்களாதலால்
3) முத்தோர் பிள்ளைகளுக்குத் தண்டனை வழங்க முடியுமாகையால்

* பொருத்தமான எண்ணைத் தெரிவு செய்க.

11) 1) 10   2) 12   3) 14



12) 1) 4   2) 6   3) 5



* மிகவும் சரியான விடையைத் தெரிவு செய்க.

13) விதை - மரம் ஆயின் ........... - கோழி
1) முட்டை 2) இறைச்சி 3) குஞ்சு

14) ........... - சிரிப்பு ஆயின் துன்பம் - அழுகை
1) ஆனந்தம் 2) மகிழ்ச்சி 3) இன்பம்

15) குகப் பிரசாந்தன் விளையாடித் திரியாமல் படிப்பில் கூடிய கவனம் செலுத்தியிருந்தால் நிச்சயமாக அவன் கடந்த புலமைப் பரிசில் பரீட்சையில் சித்தி பெற்றிருப்பான். இக்கூற்று மிகச் சிறந்த தொடர்
1) குகப் பிரசாந்தன் நினைத்ததை விட வினாத்தாள்கள் கடினமாக இருந்தமை
2) குகப் பிரசாந்தன் படிப்பை விட விளையாட்டுக்கு அதிக நேரத்தை வீணாக்கியமை
3) குகப்பிரசாந்தன் ஓரளவு நல்ல பெறுபேற்றினைப் பெற்றுள்ளமை

**16)** ஓட்டப்போட்டியில் சென்றமுறை தோற்றேன். இந்த முறை வென்றே தீருவேன் என்று சமன் கூறுகின்றான். இவன் இவ்வாறு கூறுவதற்குக் காரணமாக இருக்கக் கூடியது எது?
1) இந்தப் போட்டியில் பங்குபற்றும் எவரும் தன்னை விட ஓட மாட்டார்கள் என்பதனாலாகும்
2) சென்ற முறை தன்னை வென்றவர் இந்தப் போட்டியில் இந்த முறை பங்குபற்றவில்லை என்பதனால்
3) அவன் போட்டிக்கு நன்கு பயிற்சி பெற்றுத் தயாராகி இருப்பதனாலாகும்

**17)** எந்தக் கடினமான காரியமும் திரும்பத் திரும்ப முயற்சியுடன் செய்தால், நிச்சயம் வெற்றி கிட்டும். இந்தச் சந்தர்ப்பத்துக்குப் பொருத்தமான பழமொழி யாது?
1) பொறுத்தார் பூமியாள்வார்
2) அடிமேல் அடிஅடித்தால் அம்மியும் நகரும்
3) அழுத பிள்ளை பால் குடிக்கும்

**18)** 'போதுமென்ற மனமே பொன் செய்யும் மருந்து' என்ற பழமொழியின் கருத்து யாது?
1) உள்ளதைக் கொண்டு திருப்திப்படாத மனமாகும்
2) போதுமென்று இருந்தால் பொன்கூட மருந்தாகும்
3) மனநிறைவே ஒருவனுக்குச் சிறந்த செல்வமாகும்

**19)** 'பொதுச் சொத்துக்களைப் பேணுதல்' வேண்டும் இதற்கான காரணம்?
1) அரசினால் பொதுச் சொத்துக்கள் வழங்கப்படுவதனால்
2) பின்னர் வரும் சந்ததியினர் பயன் பெறுவதற்காக
3) நாட்டிலுள்ள மக்கள் அனைவரும் பயன்படுத்துவதற்காக

**20)** பெரும் மழை நாளில் மின்னலைத் தொடர்ந்து உடன் இடியும் முழங்குகிறது. இந்தத் தகவலில் தீர்மானிக்கக் கூடியது.
1) பெரும் மழை நாளில் மின்னலும், இடியும் ஏற்படும்
2) இடிமுழக்கம் முதலில் ஏற்படுகிறது
3) மின்னலும் இடி முழக்கமும் ஒரே நேரத்தில் ஏற்படுகின்றன

**21)** சுனில் இராமனை விட வயதில் மூத்தவன். இராமன் சரத்தை விட வயதில் மூத்தவன், சுமன் இராமனை விட வயதில் மூத்தவன், சுனிலை விட இளையவன். இவர்களுள் மிக இளையவன் யார்?
1) இராமன் 2) சுமன் 3) சரத்

**22)** கலையரசன் ஒளிப்படம் ஒன்றைக் காட்டிப் பின்வருமாறு கூறினான். இவர் எனது தந்தையின் தம்பி ஆவார். அவ்வாறெனின் கலையரசனுக்கும் அந்தப் படத்திலுள்ளவருக்குமிடையிலான உறவு முறை யாது?
1) மாமா 2) மகன் 3) சித்தப்பா

**23)** முந்தநாளுக்கு முதல் நாள் திங்கட்கிழமை எனின், நாளை மறுநாளுக்கு அடுத்த நாள் என்ன கிழமை?
1) ஞாயிற்றுக்கிழமை 2) சனிக்கிழமை 3) வெள்ளிக்கிழமை

**24)** நிசாமிடம் ஒரு சிறு தொகைப் பணம் இருக்கிறது. அந்தத் தொகைப் பணத்திலிருந்து வெள்ளித்தட்டு ஒன்று 15 ரூபாப்படி 10 தட்டுக்கள் வாங்க முடியும். அந்த வெள்ளித் தட்டின் விலை 5 ரூபாவால் குறைந்தால், நிசாம் இப்போது எத்தனை வெள்ளித் தட்டுக்களை வாங்க முடியும்?
1) 15 2) 20 3) 25

**25)** பொதிகளை தபாலில் அனுப்ப முதல் 1000 கிராம் நிறைக்கு ரூபா 8 உம், மேலதிக ஒவ்வொரு 500 கிராமுக்கும், அதன் பகுதிக்கும் ரூபா 5 வீதமும் பொதிச் செலவு அறவிடப்படுகிறது. இதன்படி 2 கிலோ கிராம் 750 கிராம் நிறையுள்ள பொதியொன்றை அனுப்புவதற்காகச் செலுத்த வேண்டிய கட்டணம் எவ்வளவு?
1) 16 ரூபா 2) 20 ரூபா 3) 28 ரூபா


**26)** பஸ் வண்டியொன்றில் 30 ஆசனங்கள் உள்ளன. அதன் இரண்டு மடங்கிலும் 20 கூடுதலான ஆசனங்கள் Bus வண்டியில் இருக்கின்றன. A பஸ் வண்டியிலுள்ள ஆசனங்களைவிட Bus வண்டியில் எத்தனை ஆசனங்கள் கூடுதலாக உள்ளன.
1) 50 2) 60 3) 70

**27)** எண்ணிக்கையின் ஒழுங்கு முறைப்படி இலங்கைச் சனத் தொகையைக் காட்டும் விடை யாது?
1) சிங்களவர் - சோனகர் - தமிழர் - பறங்கியர்
2) சிங்களவர் - பறங்கியர் - சோனகர் - தமிழர்
3) சிங்களவர் - தமிழர் - சோனகர் - பறங்கியர்

**28)** காலத்தை ஒழுங்கு முறைப்படி காட்டும் விடை யாது?
1) மாதங்கள் - நாட்கள் - வாரங்கள் - வருடம்
2) வருடம் - மாதங்கள் - நாட்கள் - வாரங்கள்
3) நாட்கள் - வாரங்கள் - மாதங்கள் - வருடம்

**29)** 
இந்த உருவைப் பாருங்கள். கீழ் உள்ள மூன்று உருக்களுள் மேலுள்ள உருவை வேறொரு திசையிலிருந்து பார்க்கும்போது தென்படுவது


1) 2) 3)

**30)** 
இவ்வுருவைப் பாருங்கள். கீழுள்ள மூன்று உருக்களுள் மேலுள்ள உருவை வேறொரு திசையிலிருந்து பார்க்கும்போது தென்படுவது,


1) 2) 3)

* எண் பிரசினங்களில் வெற்றிடத்துக்குப் பொருத்தமான குறியீட்டைத் தெரிவு செய்க.

**31)** 18 ☐ 3 ☐ 4 = 24 (1) +,÷ (2) ÷,× (3) ×,÷

**32)** 3 ☐ 3 ☐ 3 = 6 (1) +,+ (2) ×,− (3) +,÷

**33)** 25 ☐ 15 ☐ 5 = 50 (1) −,× (2) +,÷ (3) −,÷

**34)** மகிழ்ச்சியாக, இயல்பாக, கவலையாக - எனும் சொற்கள் உணர்த்தும் உருக்கள் எவை?


1) 2) 3)

**35)** 
இவ்வுருக்கள் உணர்த்தும் சொற்கள்
1) அழுதல்-சிரித்தல் 2) சிரித்தல்-அழுதல் 3) சிரித்தல்-சிரித்தல்



# வினாத்தாள் 2

**1.** இப்பாடலை வாசித்து கேட்கப்பட்டுள்ள வினாக்களுக்கு விடை எழுதுக.

*'வீதி தன்னைக் கடக்கவே நான் காத்திருந்தேன்*
*ஓரமாய்*
*வாகனங்கள் எதுவும் வரா வேளையினைப்*
*பார்த்திருந்து*
*வலப்பக்கம் பார்த்து, இடப்பக்கம் பார்த்து*
*மீண்டும் வலப்பக்கம் பார்த்து கடந்திடுவேன்*
*வீதியை!'*

1) இப்பாடல் வெளிப்படுத்தும் விடயம் யாது?
2) இங்கு வீதியைக் கடப்பது எப்போது?
3) "வாகனங்கள்" என்பதன் ஒத்த கருத்துச்சொல் ஒன்று தருக?
4) "வரா" என்பதன் எதிர்க்கருத்துச் சொல் ஒன்று தருக?
5) பக்கம் என்பதன் பன்மைச் சொல் எழுதுக.
6) உயர்திணை தன்மை எதிர்கால வினைமுற்று எழுதுக.
7) "ஓரமாய்" என்பதாற் கருதப்படுவது யாது?
8) பன்மை படர்க்கை பெயர்ச்சொல் ஒன்று எழுதுக.
9) மீண்டும் என்பதாற் கருதப்படுவது யாது?
10) வெற்றிடத்துக்குப் பொருத்தமான விடையை எழுதுக.

*'வாகனங்கள் எதுவும் வராவேளையில் வீதியைக் கடக்க வேண்டும் எனின், வாகனங்கள் யாவும்..... வீதியைக் கடக்கக் கூடாது.'*

**02.** தரப்பட்டுள்ள சொற்களை ஒழுங்குபடுத்திக் கருத்துள்ள வாக்கியமாக்கி எழுதுக
1) அனுசரித்து/ தவிர்ப்போம்/ வீதி/விபத்துக்களைத்/ விதிகளை
2) கவனமாக/ போகவேண்டும்/இடத்தில்/கடக்கும்/ கடந்து

**03)** பின்வரும் ஒவ்வொரு ஆங்கிலச் சொல்லினதும் கருத்தை தமிழில் எழுதுக.
1) Rabbit ......................
2) Nineteen ......................
3) Table ......................

**04.** பின்வரும் ஒவ்வொரு சிங்களச் சொல்லினதும் கருத்தைத் தமிழில் எழுதுக.
1) மல்லி ......................
2) நங்கி ......................
3) அய்யா ......................


**05)** பின்வரும் ஒவ்வொரு சொல்லுக்கும் பொருத்தமான ஆங்கிலச் சொல்லை எழுதுக.
1) எண்கள் ......................
2) பூக்கள் ......................
3) எறும்பு ......................

**06.** பொருத்தமான சிங்களச் சொல்லைத் தமிழில் எழுதுக
1) புத்தகம் ......................
2) கரும்பலகை ......................
3) கிளி ......................

**07.** பின்வரும் தொடர்மொழியின் கருத்தை வெளிப் படுத்தும் தனிச்சொல்லை எழுதுக.
1) இரு பகுதியினரிடையே ஒரு விடயம் பற்றி ஏற்படுத் தும் இணக்கம்
2) விபத்துக்களில சிக்கியவர்களுக்கு உடனடியாக அளிக்கப்படும் சிகிச்சை

**08.** இணைமொழிச்சொல்லை அடைப்புக்குள்ளிலிருந்து தெரிவு செய்து எழுதுக.
1) பருத்த பன்றிகளோடு, மான்களும்............. அலைந்து திரிந்தன.
(அல்லும் பகலும், எலும்பும் தோலும், அங்குமிங்கும்)
2) ஒருவனது வாழ்விலே.....................மாறி மாறி வரும். (கனவு நனவு, பட்டப்பதவி, ஏற்றம் இறக்கம்)


**09.** ஒவ்வொரு உருவினதும் கொண்ணிலைக்குரிய பெயர்களை எழுதுக.

1)........................ 2)........................

**10.** பின்வரும் காட்டிகளைப் பயன்படுத்தும் சந்தர்ப்பங் களை எழுதுக.
1) சூழ்பொருள்காட்டி
2) கலையுருக்காட்டி
3) நுணுக்குக்காட்டி
4) தொலைக்காட்டி
5) இருவிழிகாட்டி

**11.** தரப்பட்டுள்ள இசைக்கருவிகளின் பெயர்களைப் புள்ளிக்கோட்டின் மீது எழுதுக.

1)........................ 2)........................

# சின்னஞ்சிறு செய்திகள்

## ‘கூத்தரங்கு’ இதழ் வெளியாகியது

சுதுமலை—

இருமாத அரங்கியல்சார் இதழான கூத்தரங்கின் முதலாவது நினைவுச் சிறப்பு மலர், இலவச இணைப்புடன் வெளிவந்துள்ளது. தே.தேவானந்த, அ.விஜயநாதன் ஆகியோரை ஆசிரியர்களாகக் கொண்ட கூத்தரங்கில் - பேராசிரியர் கா.சிவத்தம்பியின் நேர்காணல் இடம்பெற்றுள்ளது.

கலைஞர் நா.சுந்தரலிங்கம், பெஞ்சமின், பேராசிரியர் சிவஞானசுந்தரம் (நந்தி) ஆகியோரது நினைவுக் கட்டுரைகளுடன் விமர்சனம், அனுபவப் பகிர்வுத் தொகுப்புகளுடன் -வழமையான ஆக்கங்களுடன் இவ்விதழ் வெளியாகியுள்ளது.

செயற்திறன் அரங்க இயக்கத்தால் இருமாத இதழாக அரங்கியல் சார் செயற்பாடுகள் மற்றும் செயற்பாட்டாளர்கள் குறித்த விபரங்களைத் தாங்கியதான இந்த இதழ் வெளிவருகின்றமை குறிப்பிடத்தக்கது. (91)

## பட்டதாரி பயிலுநர்கள் நியமனம்

யாழ்ப்பாணம்—

இந்து கலாசார அமைச்சின் யாழ்.அலுவலகத்துக்கு பட்டதாரி பயிலுநர்கள் 7 பேர் நேற்று முன்தினம் முதல் நியமிக்கப்பட்டுள்ளனர்.

இவர்களில் 3 பேர் இந்து கலாசார அபிவிருத்தி உதவியாளர்களாகவும், ஏனைய 4 பேரும் இந்து கலாசார அபிவிருத்தி தொழிற்பயிற்சியாளர்களாகவும் நியமிக்கப்பட்டுள்ளனர். (க)

## தெய்வீக இசையரங்கு

நல்லூர்—

நல்லூர் உற்சவத்தை முன்னிட்டு உற்சவ காலங்களில் -இளங்கலைஞர் மன்றத்தினர் தெய்வீக இசையரங்கை நடத்தவுள்ளனர்.

இந்த இசையரங்கு நல்லூர் துர்க்காதேவி மணி மண்டபத்தில் மாலை 6.30 மணிமுதல் 7.30 மணிவரை நடைபெறவுள்ளது.

இன்று மாலை நிகழ்ச்சியாக கே.ஆர்.சுந்தரமூர்த்தி, எஸ். பிரசன்னா ஆகியோரின் நாதஸ்வர, தவில் கச்சேரி இடம்பெறவுள்ளது.

## கருத்தரங்கு

சுதுமலை—

கரித்தாஸ் - கியூடெக் நிறுவனத்தின் தேசிய சமாதானப் பிரிவினரால் சிறுவர்களுக்கான ‘சுகம் தரும் சூழல்’ ஒருநாள் கருத்தரங்கு எதிர்வரும் 13 ஆம் திகதி சனிக்கிழமை நடைபெறவுள்ளது. இளவாலை வளநார் விடுதியில் கலை நிகழ்வுகளுடன், கருத்துமர்வுகளும் இடம்பெறவுள்ளதாகவும், இதில் இணைப்பாளர், ஊக்குவிப்பாளர்கள் கலந்துகொள்ளவுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

## சமய அறிவுப்போட்டி

சுதுமலை—

வேலணை பெருங்குளம் ஸ்ரீ முத்துமாரி அம்மன் ஆலய வருடாந்த மஹோற்சவத்தை முன்னிட்டு, சமய அறிவுப்போட்டியொன்று நடத்தப்படவுள்ளது.

இந்தச் சமய அறிவுப்போட்டியை வேலணை இந்து வளர்ச்சிக் கழகம், யாழ்.மைதிலி நகையகம் மற்றும் கொழும்பிலுள்ள யாழ். மைதிலி நகையகத்தினர் ஆகியோரின் பூரண ஆதரவுடன் நடத்தப்படவுள்ளது.

இந்த ஆலயத்தின் வருடாந்த மஹோற்சவம் நேற்று கொடியேற்றத்துடன் ஆரம்பமாகியது குறிப்பிடத்தக்கது.

## வளர்ப்பு நாய்களுக்கு தடுப்பூசி

மானிப்பாய்—

நவாலிப் பகுதியில் வளர்ப்பு நாய்களுக்கு இன்று தடுப்பூசி போடப்படவுள்ளதாக - அந்தப் பகுதி பொதுசுகாதாரப் பரிசோதகர் பு.யோதீபன் அறிவித்துள்ளார்.

எனவே, பின்வரும் நேர ஒழுங்கின்படி வளர்ப்புநாய்களுக்கான குடும்ப அட்டையுடன் வந்து தடுப்பூசி போட்டுக்கொள்ளும்படியும், குடும்ப அட்டை பெற்றுக்கொள்ளாதவர்கள் அதைப் பெற்றுக் கொள்ளும்படியும் அவர் கேட்டுள்ளார்.

நவாலி அரசடிச் சந்திப் பகுதியில் காலை 9 மணி தொடக்கம் 10.30 மணிவரையும், நவாலி வளர்மதி சனசமூக நிலையத்தில் காலை 11 மணி தொடக்கம் நண்பகல் 12.30 மணிவரையும், நவாலி சென்பீற்றர்ஸ் ஆலய சனசமூக நிலையத்தில் பிற்பகல் 1 மணி தொடக்கம் 2.30 மணிவரையும் தடுப்பூசி ஏற்றப்படுமென அறிவிக்கப்பட்டுள்ளது. (100)




வடமராட்சி லயன்ஸ் கழக இந்த ஆண்டுக்கான செயற்குழு உறுப்பினர் பதவியேற்பு வைபவத்துக்கு வருகைதந்த பிரதம விருந்தினர்களையும், லயன்ஸ் கழக மாவட்ட பிரதி ஆளுநர்சபைச் செயலாளர் லயன் எஸ்.ஞானராஜா, லயன் சீமாட்டி வசந்தி ஞானராஜா ஆகியோருடன் - விருந்தினர்களை மாலையணிவித்து வரவேற்கப்படுவதையும் - முன்னாள் வடமராட்சி லயன்ஸ் கழக செயலாளர் எஸ்.சிவநாதனின் சேவையைப் பாராட்டி, முன்னாள் தலைவர் லயன் எஸ்.தர்மலிங்கம் கேடயம் வழங்குவதையும் காணலாம்.

# நல்லூர் கந்தசுவாமி கோயில் உற்சவகால வீதி நடைமுறை!

நல்லூர்—

நல்லைக் கந்தனின் உற்சவம் பக்திபூர்வமாகவும், அமைதியாகவும் நடந்தேற, அடியார்களின் வசதிகளைக் கருத்திற்கொண்டு ஆலயச் சூழலில் வீதித்தடை முகாம்கள் தொடர்பான நடைமுறைகளை மாநகரசபை சுகாதார வைத்திய அதிகாரி அறிவித்துள்ளார்.

வீதித் தடைமுகாம்களுக்குள் நிரந்தரமாக வதியும் அனைத்து வாகன உரிமையாளர்களுக்கும் அனுமதிப் பத்திரம் வழங்கப்படும்.

பிரதான தடைமுகாமுக்கூடாக உள்ளே செல்பவர்கள் அனுமதிப் பத்திரத்தில் குறிப்பிட்டுள்ள தடைமுகாம் ஊடாகவே வாகனங்களை எடுத்துச் செல்ல அனுமதிக்கப்படுவர்.

முக்கிய திருவிழா நாட்களில் அனுமதிப் பத்திரத்தின் உபயோகம், தேவைக்கேற்ப நேரமாற்றம் பற்றி அறியத்தரப்படும்.

சுவாமி வெளிவீதியுலா வரும் சமயங்களில் இந்த உத்தரவுப் பத்திரம் செல்லுபடியற்றதாகக் கருதப்படும்.

ஒருவரது பெயரில் வழங்கப்படும் அனுமதிப் பத்திரத்தை வேறு ஒருவர் பயன்படுத்துவதற்கு அனுமதிக்கப்படமாட்டாது. இந்த மாற்றங்கள் கண்டுபிடிக்கப்படின், குறித்த அனுமதிப் பத்திரம் பறிமுதல் செய்யப்படும்.

ஆலயச் சூழலில் தற்காலிக வியாபார நிலையங்களை அமைப்பவர்களுக்கு அனுமதிப் பத்திரங்கள் எதுவும் வழங்கப்படமாட்டாது.

வர்த்தகப் பெருமக்கள் தமது விற்பனைப் பொருட்களை வாகனம் மூலம் உள்ளே கொண்டுவரவும், வெளியே எடுத்துச் செல்லவும் வீதித்தடை முகாம்கள் அமுலில் இல்லாத நேரங்களில் அனுமதிக்கப்படுவர்.

இவை தொடர்பான மேலதிக தகவல்களுக்கும், தேவைகளுக்கும் நல்லூர் இந்து விடுதியிலுள்ள உற்சவகாலப் பணிமனையுடன் தொடர்புகொள்ளமுடியும் என, சுகாதார வைத்திய அதிகாரி டொக்டர் ம.மரியதாஸ் தெரிவித்துள்ளார்.

# திலீபன் மருத்துவமனைக்கு அம்புலன்ஸ் அன்பளிப்பு!

புங்குடுதீவு—

புங்குடுதீவு தியாக தீபம் திலீபன் மருத்துவசேவைக்கு, கனடாவில் வாழும் புங்குடுதீவு பழைய மாணவர்களின் நிதி உதவியுடன் அம்புலன்ஸ் ஒன்று அன்பளிப்புச் செய்யப்பட்டுள்ளது.

இந்த நிகழ்வு - கடந்த சனிக்கிழமை காலை 11 மணியளவில் புங்குடுதீவு திலீபன் மருத்துவ சேவை நிலையத்தில், தீவகக் கோட்ட அரசியற்துறை துணைப் பொறுப்பாளர் இசைச்செல்வன் தலைமையில் நடைபெற்றது.

அம்புலன்ஸை திலீபன் மருத்துவசேவைப் பொறுப்பாளர் செ.நாயகன் உத்தியோகபூர்வமாகக் கையளிக்க - அதனை நிலையத்தின் சிறப்பு மருத்துவப் போராளி நா.வண்ணனும், இந்த நிலையத்தின் அபிவிருத்திக் குழுவின் பொருளாளரும் கையேற்றனர்.

இந்த நிகழ்வில் அந்தப் பிரதேச இந்துமதகுரு, அரச அரசசார்பற்ற நிறுவனங்களின் பிரதிநிதிகள், பொதுமக்கள், போராளிகள், மருத்துவசேவைத் தொண்டர்கள் எனப் பலரும் பங்குபற்றினர்.

# மாகாணமட்ட விளையாட்டுப்போட்டி யாழ்ப்பாண விளையாட்டரங்கில்!

## 13, 14 ஆம் திகதிகளில் நடைபெறும்

யாழ்ப்பாணம்—

வடக்கு - கிழக்கு மாகாண விளையாட்டுத் திணைக்களம் நடத்தும், 17 ஆவது வடக்கு - கிழக்கு மாகாண மாவட்டங்களுக்கு இடையிலான மெய் வல்லுநர் போட்டி எதிர்வரும் 13, 14 ஆம் திகதிகளில் யாழ்ப்பாணம் விளையாட்டரங்கில் இடம்பெறவுள்ளது.

ஆரம்ப நிகழ்வுக்கு பிரதம விருந்தினராக யாழ்.அரச அதிபர் கே.கணேஸும், இறுதி நிகழ்வுக்கு பிர்தமவிருந்தினராக யாழ். பல்கலைக்கழக துணைவேந்தர் பேராசிரியர் எஸ்.மோகனதாஸும், தமிழீழ விளையாட்டுத் துறைப் பொறுப்பாளர் பாப்பாவும் கலந்துகொள்ளவுள்ளனர்.

வடக்கு - கிழக்கு மாகாண வீர, வீராங்கனைகள் கலந்து கொள்ளும் இந்த மெய்வல்லுநர் போட்டியில் 262 ஆண்களும், 215 பெண்களும் கலந்து கொள்ளவுள்ளனர்.

இந்தப் போட்டிகளில் முதல் மூன்று இடங்களைப் பெறும் வீர, வீராங்கனைகள் எதிர்வரும் 25 ஆம் திகதி தொடக்கம் 27 ஆம் திகதிவரை மாத்தளையில் நடைபெறவுள்ள தேசியமட்ட விளையாட்டுப்போட்டியில் பங்குபற்றுவர்.

## வருடாந்த மஹோற்சவம்

கொக்குவில்—

வண்.வடமேற்கு நாவலடி மனோன்மணி அம்பாள் தேவஸ்தானத்தின் வருடாந்த அலங்கார உற்சவம் - இன்று காலை 10 மணிக்கு ஆரம்பமாகி, தொடர்ந்து 12 தினங்கள் நடைபெறவிருக்கின்றது.

20 ஆம் திகதி சனிக்கிழமை மாலை 7 மணிக்கு பூங்காவனமும், 21 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை வைரவர் மடையும் இடம் பெறும். (206)

★ ★ ★

மீசாலை—

மீசாலை - திருநீலகண்ட வெள்ளை மாவடிப் பிள்ளையார் ஆலய வருடாந்த மஹோற்சவம் இன்று கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி - தொடர்ந்து 10 தினங்கள் நடைபெறவுள்ளது. 18 ஆம் திகதி வியாழக்கிழமை காலை 8 மணிக்கு தேர்த் திருவிழாவும், மறுநாள் வெள்ளிக்கிழமை தீர்த்தத் திருவிழாவும் நடைபெறவுள்ளது. (29)

★ ★ ★

கொக்குவில்—

நவாலியூர் அந்திரான் முருகமூர்த்தி தேவஸ்தானத்தின் வருடாந்த மஹோற்சவம் - இன்று நண்பகல் 11 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகித் தொடர்ந்து 10 தினங்கள் நடைபெறவுள்ளது.

17 ஆம் திகதி புதன்கிழமை மாலை 4 மணிக்கு புதிய சிற்பத் தேரின் வெள்ளோட்டம் நடைபெறும். 18 ஆம் திகதி வியாழக்கிழமை காலை 9 மணிக்கு தேர்த்திருவிழாவும், 19 ஆம் திகதி வெள்ளிக்கிழமை காலை 10 மணிக்கு தீர்த்த உற்சவமும் இடம்பெறும். (206)

# கால்நடை வளர்ப்போர் சங்க சமாசம் அங்குரார்ப்பணம்!

சுதுமலை—

யாழ்.மாவட்ட கால்நடை வளர்ப்போர் சங்கங்களுக்கான சமாசம் ஒன்று அண்மையில் அங்குரார்ப்பணம் செய்யப்பட்டது.

திருநெல்வேலியில் உள்ள மாவட்ட விவசாயப் பயிற்சி நிலையத்தில், நல்லூர் கால்நடை வளர்ப்போர் கூட்டுறவுச் சங்கத் தலைவர் ரீ.துரைமணி தலைமையில் நடைபெற்ற இந்த அங்குரார்ப்பண நிகழ்வில், யாழ்.மாவட்டத்தில் உள்ள 14 கால்நடை வளர்ப்போர் கூட்டுறவுச்சங்க பிரதிநிதிகள் கலந்துகொண்டனர்.

இவர்களில் சமாசத்துக்கான 7 இயக்குனர்கள் தெரிவுசெய்யப்பட்டுள்ளதாகத் தெரியவருகிறது. (44)

# வீதியோர பற்றைகளை அகற்றுமாறு கோரிக்கை

சுதுமலை—

சண்டிலிப்பாய் பிரதேச செயலர் பிரிவில் காணப்படும் வீதியோரப் பற்றைகளை அகற்றித் தருமாறு - மானிப்பாய் பிரதேச சபையால் வேண்டுகோள் விடப்பட்டுள்ளது.

சண்டிலிப்பாய் பிரதேச செயலர் பிரிவுக்குட்பட்ட -

பெரியவிளான் வீதி - தெல்லிப்பளை வீதி,

பெரியவிளான் வீதி - உயரப்புலம் வீதி,

பெரியவிளான் வீதி - சிறுவிளான் வீதி, வழுக்கியாற்று வீதி ஆகிய வீதிகளின் ஓரங்களில் பற்றைகள் வளர்ந்து - போக்குவரத்துக்குப் பெரிய இடையூறுகளை விளைவிக்கின்றன.

எனவே, இந்தப் பற்றைகளை அகற்றித்தருமாறு பிரதேச சபையால் - வீதி அபிவிருத்தி அதிகார சபையிடம் வேண்டுகோள் விடுக்கப்பட்டுள்ளது. (44)

# ஆடு வளர்ப்பதற்கான விசேட பயிற்சி நெறி!

யாழ்ப்பாணம்—

யு.என்.டி.பியின் உதவித் திட்டத்தின் கீழ் - ஆடு வளர்ப்பு சம்பந்தமானள விசேட பயிற்சி ஒன்று மந்திகை கால்நடை வைத்திய சாலையில் இடம்பெறவுள்ளது.

இந்தப் பயிற்சிநெறியில் பங்குபற்றுபவர்களின் என்ணிக்கை 30 ஆக வரையறுக்கப்பட்டுள்ளதால் - அதில் கலந்து கொள்ள விரும்புவோர் எதிர்வரும் 13 ஆம் திகதிக்கு முன்னதாகத் தமது பெயர்களை அலுவலகத்தில் பதிவு செய்துகொள்ளுமாறு கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளனர்.

மேலும் இந்தப் பயிற்சி நெறியில் கலந்துகொள்பவர்களுக்கு இலவசமான கைநூல்கள், சான்றிதழ்கள் என்பன வழங்கப்படவுள்ளதாக கால்நடை வைத்தியர் சி.வசீகரன் தெரிவித்துள்ளார். (12)

# அரிசி ஆலை, அரைக்கும் ஆலை உரிமையாளர்களுக்கு சுகாதார சேவையால் வன்னியில் அறிவூட்டல் பட்டறை

கிளிநொச்சி

கிளிநொச்சி, முல்லைத்தீவு, வவுனியா, மன்னார் ஆகிய மாவட்டங்களிலுள்ள அரிசி அரைக்கும் ஆலை உரிமையாளர்களுக்கான அறிவூட்டல் பட்டறை - நேற்று முன்தினம் கிளிநொச்சி பண்பாட்டு மண்டபத்தில் தமிழீழ சுகாதார சேவையினரின் ஒழுங்குபடுத்தலில் நடைபெற்றது.

இந்த நிகழ்வின் பொதுச் சுடரை கிளிநொச்சி மாவட்டச் செயலக பொறியியலாளர் தயாபரசிவம், கரைச்சிப் பிரதேச செயலாளர் குலேந்திரன் ஆகியோர் ஏற்றி வைத்தனர். தமிழீழத் தேசியக் கொடியை தமிழீழ சுகாதார சேவைகள் பணிப்பாளர் விக்கிரமன் ஏற்றி வைத்தார்.

இதனை தொடர்ந்து கிளிநொச்சி மாவட்ட செயலகப் பொறியியலாளர் தயாபரசிவம்- ஆலைத்தொழிநுட்பமும், கட்டடத் தொழில் நுட்பமும் சம்பந்தமான கருத்துரைகளை நிகழ்த்தினார்.

கிளிநொச்சி சுற்றாடல் சுகாதார உத்தியோகத்தர் ஏ.தமிழ்ச் செல்வி - சுற்றாடற் சுகாதாரம் மற்றும் ஆலை அமைப்புச்சம்பந்தமான கருத்துரைகளையும் நிகழ்த்தினார். கிளிநொச்சி பொதுச் சுகாதாரப் பரிசோதகர் தவராசா - பணியாளர் நலன் மற்றும் ஆலைக் கழிவகற்றல் தொடர்பான கருத்துரைகளையும் நிகழ்த்தினார். தமிழீழசுகாதார சேவைகள் பணிப்பாளர் விக்கிரமன் - ஆலையின் அடிப்படை ஒழுங்கு விதிகள் தொடர்பான கருத்துகளையும், ஆலை உரிமையாளர்களின் கேள்விகளுக் குப் பதிலும் அளித்தார்.

இந்த நிகழ்வில் கலந்து கொண்ட அரிசி ஆலை, அரைக்கும் ஆலை உரிமையாளர்களுக்கு சான்றிதழ்களை தமிழீழ சுகாதார சேவைப் பணிப்பாளர் விக்கிரமன் வழங்கினார்.

இதில்நூற்றுக்கும் மேற்பட்ட அரிசி ஆலை, அரைக்கும் ஆலை உரிமையாளர்கள் கலந்து கொண்டனர்.

# குடும்பஸ்தர் கடத்தப்பட்டார்; மனைவிக்கு வாள்வெட்டு!

வவுனியா

வவுனியா குட்செட் வீதியில் கடந்த ஞாயிற்றுக்கிழமை இரவு 8.30 மணியளவில் இனந்தெரியாத நபர்களால் தனியார் பஸ் உரிமையாளர் ஒருவர் ஆயுதமுனையில் கடத்திச் செல்லப்பட்டார்.

தடுக்கச் சென்ற அவரின் மனைவி வாளால் வெட்டப்பட்டு, காயங்களுடன் வவுனியா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டார். கடத்தப்பட்டவர் விஜயன் என்றும். இவர் தனியார் பஸ் சேவைகள் நடத்தி வருபவர் என்றும் தெரிவிக்கப்படுகிறது.

50 ஸ்ரீ 3254 என்ற வாகனத்தில் வந்தவர்களே இவரை ஆயுத முனையில் கடத்திச் சென்றிருப்பதாக அந்தப் பகுதிக்குச் சென்ற வவுனியா மாவட்ட நகர அரசியற்துறைப் பொறுப்பாளர் தர்மேந்திரா தெரிவித்தார்.

இது தொடர்பாக வவுனியா பொலிஸாருக்குத் தகவல் கிடைத்தவுடன், அவர்கள் சென்று விசாரணைகளை மேற்கொண்டனர். கடத்தப்பட்டவர் எங்கு கொண்டு செல்லப்பட்டார் என்றோ அல்லது அவருக்கு என்ன நடந்ததென்றோ தெரியவில்லை.

## கைக்குண்டு வெடித்தது

வவுனியா

வவுனியா -மகாறம்பைக்குளம் வீட்டுத் திட்டத்தில் அம்மன் கோவில் திருவிழாவில் கடந்த ஞாயிற்றுக்கிழமை இரவு இசை நிகழ்ச்சி நடைபெற்றுக் கொண்டிருந்தவேளை, இனந்தெரியாதவர்களால் கைக்குண்டு ஒன்று வீசப்பட்டது.

இந்தக் கைக்குண்டு விழுந்து வெடித்த இடத்தில் மக்கள் இல்லாததால், எந்தவித சேதமும் ஏற்படவில்லை..

இது தொடர்பான விசாரணைகளை வவுனியா மாவட்ட பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (03)

# மகளிர் அரசியற்துறை அலுவலகத்தில் இன்று பத்திரிகையாளர் மாநாடு!

கிளிநொச்சி

விடுதலைப் புலிகளின் மகளிர் அரசியற்துறையினரால், கிளிநொச்சி மகளிர் அரசியற் துறை அலுவலகத்தில் இன்று காலை 10 மணிக்கு பத்திரிகையாளர் மாநாடு ஒன்று நடைபெறவுள்ளது.

இந்த மாநாட்டில் கடந்த இருபதாண்டுகளுக்கு மேலாக விடுதலைப் போராட்டத்தில் மகளிரின் பங்களிப்பு, முதற் போர்ப் பயிற்சிக் கல்லூரியின் பயிற்சி அனுபவம் தொடக்கம் களத்தில் சாதனை வரையான விடயங்கள் பற்றி விளக்கவுள்ளனர்.

தமிழீழ விடுதலைப் போராட்டத்தினுள் தமிழீழத் தேசியத் தலைவரால் தூரநோக்குடன் பெண்கள் உள்வாங்கப்பட்டு இன்றுடன் இருபதாண்டுகள் நிறைவடைந்துள்ளன.

கடந்த இருபதாண்டுகளில் ஈழவிடுதலைப் போராட்டத்தில் பெண்களின் பங்கு குறித்தும், தாம் ஏன் போராட முன்வந்தார்கள் என்பது பற்றியும் விடுதலைப் புலிகளின் மகளிர் படையணியின் மூத்த போராளிகள்- ஊடகவியலாளர்களைச் சந்தித்துக் கலந்துரையாடவுள்ளனர்.

இந்தக் கலந்துரையாடலில் விடுதலைப் புலிகளின் மகளிர் படையணித் தளபதிகள், மூத்த போராளிகள் பெண்படைப்பாளிகள் எனப் பலரும் கலந்து கொள்ளவுள்ளனர். (03)

# தமிழீழ நுண்கலைப் பிரிவால் புதிய இரு கலைக்கல்லூரிகள்

கிளிநொச்சி

தமிழீழ நுண்கலைப் பிரிவினரால் புதிதாக இரண்டு நுண்கலைக் கல்லூரிகள் எதிர்வரும் 19 ஆம் திகதி கிளிநொச்சிப் பிரதேசத்திலும், 21ஆம் திகதி மல்லாவிப் பிரதேசத்திலும் ஆரம்பிக்கப்படவுள்ளன.

இவற்றுக்கான கட்டட மற்றும் முன் ஆயத்த வேலைகள் துரித கதியில் நடைபெற்று வருகின்றன. மண்பற்றும், மொழிப் பற்றும், தேசியப்பற்றும், நற்பண்புகளும் நிறைந்த கலைஞர்களை உருவாக்குவதே இதன் தலையாய நோக்கமாகும்.

இந்த வகையில் ஏற்கனவே தமிழீழ நுண்கலைப் பிரிவினரால் முள்ளியவளை பிரதேச நுண்கலைக் கல்லூரியும், புதுக்குடியிருப்பு பிரதேச நுண்கலைக் கல்லூரியும் வெகு சிறப்பாக இயங்கி வருவது குறிப்பிடத்தக்கது.

# தமிழ்த் தேசிய எழுச்சிப் பிரகடன வலுச்சேர்ப்பு ஒன்றுகூடல் நிகழ்வு

கிளிநொச்சி

தமிழ்த் தேசிய எழுச்சிப் பிரகடன வலுச்சேர்ப்பு ஒன்றுகூடல் நிகழ்வு - நேற்று முன்தினம் காலை 10 மணிக்கு கிளிநொச்சி அரச சார்பற்ற நிறுவனங்களின் இணையச் செயலக மண்டபத்தில் இடம் பெற்றது.

தமிழ்த் தேசிய எழுச்சி செயலணிக்குழுத் தலைவர் பிரபா தலைமையில் இந்த ஒன்றுகூடல் நிகழ்வு இடம்பெற்றது.

இந்த நிகழ்வில் கருத்துரைகளை செயலணிக்குழு செயலாளர் மற்றும் உறுப்பினர்கள் நிகழ்த்தினர்.

கிளிநொச்சி மாவட்டத்தின் நான்கு பிரதேச செயலர்கள், அரச திணைக்களத் தலைவர்கள், பிரதிநிதிகள் கலந்து கொண்டு ஆலோசனைகளை வழங்கினர்.




கரித்தாஸ் - கியூடெக் நிறுவனத்தால் முல்லைத்தீவு மகா வித்தியாலயத்துக்கு ஒரு தொகுதி கதிரை, மேசைகளைக் கையளித்தனர். பெற்றுக் கொண்ட கதிரை, மேசைகளுடன் அதிபரையும் , மாணவியையும் படத்தில் காணலாம். (91)

# விளையாட்டுப்போட்டி

வவுனியா

விசேட தேவைக்குட்பட்டோருக்கான விளையாட்டுப் போட்டி - கடந்த ஞாயிற்றுக் கிழமை காலை 9 மணிக்கு ஆரம்பமாகி, மாலை 5மணி வரை இடம் பெற்றுள்ளது.

சமூகம் சார் புனர்வாழ்வு திட்ட நிறுவனத் தலைவர் எஸ். சுப்பிரமணியம் தலைமையில் நடைபெற்ற இந்தப் போட்டியில், நான்கு பிரதேச செயலகங்களைச் சேர்ந்த 216 பேர் பங்கு பற்றினர்.

இதில் வவுனியா வலுவூட்டல் வளாகத்தைச் சேர்ந்தவர்கள் முதலாவது இடத்தையும், வவுனியா சமூகம் சார் புனர்வாழ்வுத் திட்டத்தைச் சேர்ந்தவர்கள் இரண்டாவது இடத்தையும், நெடுங்கேணி சமூகம் சார் புனர்வாழ்வு திட்டத்தைச் சேர்ந்தவர்கள் மூன்றாவது இடத்தையும் பெற்றுக் கொண்டனர்.

# வீதிப் போக்குவரத்தில் கட்டுப்பாடுகள்

பரந்தன்

பரந்தன் - முல்லைத்தீவு நெடுஞ்சாலையில் வேகமாக வாகனங்களை ஓட்டிச் செல்பவர்கள்மீது, தமிழீழ காவல்துறையினர் கடும் நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

வாகன ஓட்டுநர்கள் வீதி அறிவுறுத்தல்களுக்கு அமைய, வேகக்கட்டுப்பாட்டுச் சமிக்ஞையை மீறி வாகனங்களைச் செலுத்துவதால், பல வீதி விபத்துகள் இடம்பெறுகின்றன.

இதனால் தமிழீழ காவல்துறையினர் வீதியோரங்களில் வேகக் கட்டுப்பாட்டுக் கருவி மூலம் வேகத்தைக் கணித்து, வேகக் கட்டுப்பாட்டை மீறுவோர் மீது குற்றப்பணம் அறவீடு செய்வதால் வீதியில் வாகனங்கள் வேகமாகச் செலுத்துவது குறைந்துள்ளது. இதனால் விபத்துக்கள் குறைந்துள்ளன.

தமிழீழ காவல்துறையின் வீதிப்போக்குவரத்து வேகக் கட்டுப்பாட்டுப் பிரிவினரின் இந்த நடவடிக்கையை மக்கள் பாராட்டியுள்ளதுடன், இந்த நடவடிக்கை தொடரவேண்டும் எனவும் கேட்டுள்ளனர்.

# இன்றைய நாளில்... அன்று நிகழ்ந்தவை...

## ஓகஸ்ட் - 10

1675: உலகப் புகழ்பெற்ற கிறீன்விச் வானியல் ஆய்வுகூடத்துக்கான அடிக்கல் நடப்பட்டது.

1821: மிஸெளறி - அமெரிக்காவின் 24ஆவது மாநிலமாக இணைந்தது.

1886: மாஸா சூஸட் நகரில் லின் என்னுமிடத்தைச் சேர்ந்த எலிஹீ தாம்ஸம் என்பவர் மின்சார ஒட்டு கருவி தயாரிப்பதற்கான உரிமத்தைப் பெற்றுக்கொண்டார்.

1893: டீசல் இயந்திரத்தின் முன்மாதிரியொன்று ஜேர்மனியில் ஆக்ஸ்பர்க் தொழிற்சாலையில் செயற்படுத்திப் பார்க்கப்பட்டது.

1915: மோஸ்லி விதியைக் கண்டுபிடித்துத் தந்த ஜேர்மனியரான ஹென்றி கிவின் ஜெர்ப்ரி மோஸ்லி மரணமடைந்தார். ஒரு மூலகத்தின் இரசாயனத்தன்மை அதன் அணு எண்ணைக் கொண்டே நிர்ணயிக்கப்படுகிறது என்பதை முதன் முதலாக இவர் நிரூபித்துக் காட்டினார்.

1938: ரஷ்யாவுக்கும், ஜப்பானுக்கும் இடையே போர் நிறுத்தம் ஏற்பட்டது.

1961: ஐரோப்பிய பொதுச்சந்தை அமைப்பில் பிரிட்டன் உறுப்பினராக இணைந்து கொண்டது.

1964: துருக்கியும், கிறீஸும் ஐக்கிய நாடுகள் சபையின் போர் நிறுத்த வேண்டுகோளை ஏற்றுக்கொண்டன.

1966: சந்திரனின் நடுவரைக் கோட்டைச் சுற்றி வந்து, அங்கே விண்கலங்கள் இறங்குவற்கு வசதியான இடங்களை ஒளிப்படம் எடுத்து அனுப்பும் நோக்கத்துக்காக அமெரிக்காவால் ஆர்ப்பிட்டர்-1 என்ற விண்கலம் செலுத்தப்பட்டது.

1979: இந்தியா தனது ஸ்ரீஹரிக்கோத்தா ஏவுதளத்திலிருந்து ஏ.எஸ்.எல்.வி-3 என்ற விண்கலம் மூலமாக, ரோகிணி - இ-1 என்ற செயற்கைக் கோளை ஏவியது. இந்த முயற்சி தோல்வியில் முடிந்தது.

1980: இரண்டாம் உலகப் போரில் அமெரிக்காவில் பெண்கள் விமானப் படையணிக்குத் தலைமைதாங்கியவரும், குண்டுவீச்சு விமானத்தை அத்திலாந்தைக் கடந்து முதன் முதல் செலுத்திச் சென்ற பெண்மணியும், விமானம் செலுத்துவதில் பல்வேறு விருதுகளையும் வென்றவருமான ஜாக்யூலின் கோக்ரான் மரணமடைந்தார்.

1994: நல்லூர் முத்திரைச் சந்தைப் பகுதியில் கிட்டு சிறுவர் பூங்கா திறந்து வைக்கப்பட்டது.

* : வங்களாதேசத்தைச் சேர்ந்தவரும், புகழ்பெற்ற எழுத்தாளருமான தஸ்லிமா நஸ்ரீன் சுவீடனில் தஞ்சமடைந்தார்.

2000: இலங்கைப் பிரதமர் பதவியிலிருந்து சிறிமாவோ பண்டாரநாயக்க விலகினார். புதிய பிரதமராக ரத்தினசிறி விக்கிரமநாயக்க பதவியேற்றார்.

2002: ஆசிய விளையாட்டுப் போட்டியில் 100 மீற்றர் ஓட்டத்தில் குறுந்தூர ஓட்ட வீராங்கனை சுசந்திகா தங்கம் வென்றார்.

* : ஈர்க் வர்டார் சுதந்திர தினம்.

தொகுப்பு - சந்துரு

நமது ஈழநாடு

வைர வரிகள்

சிம்மாசனத்தை நோக்கிப் புளுவாக
நெளிவதைவிடப் புளுதியில் ராஜாவாக
இருக்கலாம்..
- யாரோ

## நமது நோக்கு

### பிரதி அமைச்சருக்கு எதிரான சிறுபான்மை இனத்தவரின் குரல்

சிறுபான்மை இன மக்களை இழிவுபடுத்தி எள்ளி நகையாடுவதும், அவர்களின் உரிமைகளைப் பறித்து அவர்களை அடிமைகளாக்கி, அதிகாரம் செலுத்தி ஆள நினைப்பதும் சிங்கள பௌத்த பேரினவாத அரசியல்வாதிகளின் ஒரு பாரம்பரிய அநாகரிக கலாசார குணாம்சமே ஆகும்.

அவ்வப்போது ஓரிரு மனித நேயப் பண்பும், ஜனநாயக சிந்தனையும், அறிவுபூர்வமான சிந்தனையும் கொண்ட சிங்களத் தலைவர்கள் இந்த அநாகரீக கலாசார பாரம்பரியத்தில் இருந்து தம்மை விடுவித்துக்கொண்ட பண்பாளர்களாக தம்மை அடையாளப்படுத்தியதையும் மறக்கமுடியாது. எனினும், அத்தகைய மனிதாபிமான உணர்வுடையோரை தென்பகுதி அரசியல் சமூகம் தங்களில் ஒருவராக ஏற்றுக்கொள்ளாத காரணத்தால் அவர்களால் அரசியலில் பேரினவாதம் எதனையும் அர்த்தபூர்வமாகச் சாதிக்கமுடியாது போயிற்று. அதனால் அரசியலில் - அதுவும் சிங்களப் பேரினவாதிகளால் அவர்கள் அநாமதேய பேர்வழிகளாக்கப்பட்டு மறக்கப்படும் மனிதர்களாகிப் போனதும் போய்க் கொண்டிருப்பதும் துரதிஷ்ட நிகழ்வுகளேயாகும்.

இத்தகைய சூழலே இலங்கையின் இனப் பிரச்சினையை யுத்தத்தால் தீர்க்கவேண்டிய நிலைக்கு இட்டுச் சென்றது என்றால் அதுவே உண்மையாகும்.

டி.எஸ்.சேனநாயக்க முதற்கொண்டு பண்டாரநாயக்காக்கள், ஜெயவர்த்தனா, விஜேதுங்க என நீண்ட பட்டியலைக் கொண்டதான சிங்களத் தலைவர்கள் எவருமே சிறுபான்மை இனத்தவரைத் தங்களது எடுபிடிகளாக வைத்திருக்க விரும்பினார்களேயன்றி - அவர்களின் சுயநிர்ணய உரிமையை, இனத் தனித்துவத்தை, அங்கீகரிக்கும் மனநிலை கொண்டவர்களாக ஒருபோதுமே இருந்தது கிடையாது. வெளிக்கு ஜனநாயகவாதிகள் போன்று தம்மை அவர்கள் இனங்காட்டிக்கொண்டாலும், உள்ளூர அவர்கள் சிறுபான்மை இனத்தவரை ஆட்டிப் படைக்கும் சர்வாதிகார சிந்தனை கொண்டவர்களாகவே இருந்தனர்.

சிறுபான்மை இனத்தவரை தமது அரசுகளுக்கு முண்டு கொடுக்கும் அஃறிணைப் பொருட்களாகவே கருதிய பெரும்பான்மையின ஆட்சித் தலைமைகள் அவர்களை எப்படியெல்லாம் காலம்காலமாக அவமதித்து, கேவலப்படுத்தி, அடக்கியொடுக்க முயன்றார்கள் என்பதற்கு கே.எம்.பி. இராஜரத்ன, பண்ராட நாயக்க, ஆர்.ஜி.சேனநாயக்க, கிரியகொல்ல, நெவில் பெர்னாண்டோ, சி.பி.டி.சில்வா, சிறில் மத்தியூ, ஜே.ஆர்.ஜெயவர்த்தன, பிரேமதாச, விஜேதுங்க, லலித் அத்துலத் முதலி... எனத் தொடரும் சிங்களத் தலைவர்களின் கடந்தகால நாடாளுமன்ற உரைகள், பொதுக் கூட்டப் பேச்சுக்கள் போன்றவற்றை ஒரு முறை மீள்பார்வை செய்தாலே போதும்.

“தமிழரின் தோலில் செருப்புத் தைத்துப் போடவேண்டும்.”என்று சொன்னவரும், “தமிழ்த் தலைவர்களைக் கழுவேற்றிக் கொல்லவேண்டும்” என்று ஊழையிட்டவரும், “யுத்தமா சமாதானமா” என தமிழ் மக்களை நோக்கிப் போர்ப் பிரகடனம் செய்தவரும், “தமிழர்கள் இந்த நாட்டின் வந்தேறு குடிகள்” என வர்ணித்தவரும்... இன்னும் இன்னோரன்ன பலவற்றைக் கூறியவர்களும் இந்தப் பட்டியலில் உள்ளவர்களேயாவர். இவர்களின் மனித நேயத்தையும், ஜனநாயகப் பண்பையும் புரிந்துகொள்ள மேற்குறித்த விடயங்களை மீள் வாசிப்புச் செய்தாலே போதும்....

ஏன், இன்றைய ஜனாதிபதியின் தமிழ் மக்களுக்கு எதிரான போரைப் பயங்கரவாதிகளுக்கான யுத்தம் என வர்ணித்து - சமாதானத்துக்கான யுத்தம் என அதற்கு நாமம் சூட்டியவர்தானே...!

இந்த வரிசையில் கடைசியாகத் தனது குரலை உளற வைத்திருப்பவர் பிரதியமைச்சர் மேர்வின் சில்வா. அவரது வரலாறு சிங்கள மக்களிடையே இன்று நாறிக்கொண்டிருப்பது வேறு விடயம்.

அவர் மலையக மக்களை இழிவுபடுத்தப் பயன்படுத்திய சொல் - அவரது அரசியல் பண்பின் கீழ்த்தரத்தை நன்கு அடையாளப்படுத்திவிட்டது. மக்களின் வாக்குகளைப் பெற்று, நாடாளுமன்றம் செல்லும் வக்கற்றவராகி, பின்புறமாக தேசியப் பட்டியல் ஊடாக நுழைந்து, கதிரையில் உட்கார்ந்த மேர்வின் சில்வாவுக்கு ஏன் அமைச்சர் பதவி வழங்கப்பட்டது என்பது கூட ஊரறிந்த விடயம்.

அவரது கடந்தகால அரசியல் ரௌடித்தனங்களும், குத்துக் கரணங்களும், அவரின் புகழின் தன்மைக்கு எடுத்துக் காட்டாகும்.

ஆனால், அவரின் ‘குரைப்பு’ இம்முறை அவருக்குச் சரியான ‘அடி’யைக் கொடுத்தேயுள்ளது.

அவருக்கெதிரான சிறுபான்மை இனத்தவர் அனைவரதும் ஒருங்கிணைந்த குரல், இம்முறை கொழும்பிலேயே ஓங்கி ஒலித்துள்ளது. நியாயவான்களான பெரும்பான்மைச் சமூகத்தைச் சேர்ந்தவர்களும், மேர்வின் சில்வாவின் பேச்சுக்கு கண்டனம் தெரிவித்திருப்பதும், சிறுபான்மை சமூகத்தவர்களுக்குச் சார்பாக குரல் கொடுத்திருப்பதும் வரவேற்கவேண்டிய விடயமேயாகும்.

கொழும்பில் இம்முறை நடைபெற்ற கண்டன ஆர்ப்பாட்டம், இனிமேலும் சிறுபான்மை மக்களை, பெரும்பான்மை அரசியல் தலைமைகள் இழிவுபடுத்துவார்களேயானால் அதன் விளைவு பாரதூரமானதாகவே இருக்கும் என்ற முக்கிய செய்தியை உலகுக்குக் தெரிவித்துள்ளது.

சிறுபான்மை இன மக்களின் இந்த ஒன்றிணைந்த குரலுக்கு ஆட்சித் தலைமை என்ன வகையில் மதிப்புக் கொடுக்கப் போகின்றது என்பதே இப்போதைய வினா.

நாகரீகமுள்ள ஆட்சியில் - பொறுப்புள்ள தலைமை இத்தகைய நபர்களை பதவியில் இருந்து தூக்கியெறிந்து, தனது ஜனநாயக உரிமையை உறுதி செய்யும் என்பதே யதார்த்தம்.

ஆனால், ஜனாதிபதி இதைச் செய்வாரா?

செய்யாவிடின், அதைச் செய்யும்வரை சிறுபான்மை இனத்தவர் அனைவரும் ஒன்றிணைந்து போராடவேண்டியது அவசியம்.

ஏனெனில், இது கௌரவப் பிரச்சினையும் ஆகும்...!

267, Navalar Road,
Jaffna.
T.P. - 021-2225107
www.eezhanaadu.com

## நாடும் நடப்பும்




# கனடா ரொறன்ரோவில் சிறப்பாக நடைபெற்ற தமிழர் நாள் நிகழ்வு

கொழும்பு

கடந்த சனிக்கிழமை கனடா ரொறன்ரோ நகரில் நடைபெற்ற மூன்றாவது வருடாந்த தமிழர் நாள் நிகழ்வில் சுமார் 15 ஆயிரத்துக்கும் மேற்பட்ட கனடிய தமிழர்கள் கலந்து சிறப்பித்தனர்.

அமெரிக்காவின் டிஸ்னி வேல்ட் போன்று சிறுவர் முதல் பெரியவர்கள் வரை அனைவரும் ஒரு நாளை இனிதே கழிக்கும் வகையில் 65 சவாரிகள், 200 காட்சிகள் என பிரமாண்டமான தளத்தை ரொறன்ரோவில் கொண்டுள்ள பரமவுண்ட் வொன்டலாண்டிலேயே தமிழர் நாள் நடைபெற்றது.

வழமையாக 56.21 டொலர்களுக்கு விற்கப்படும் நுழைவுச்சீட்டு, தமிழர் நாளை முன்னிட்டு விசேட கழிவு விலையில் 28 டொலர்களுக்கு விழா அமைப்பாளர்களான கனடிய தமிழ் இளையோர் அமைப்பால் விற்பனை செய்யப்பட்டது. விழாவுக்கு முந்திய மூன்று நாட்களும் நுழைவுச் சீட்டுகளுக்கு ஆயிரக்கணக்கில் மக்கள் முண்டியடித்தனர்.

கடந்த வருடத்தை விட இந்த முறை இருமடங்கு நுழைவுச் சீட்டுக்கள் விற்பனையாகியதாக விழா அமைப்பாளர்கள் தெரிவித்தனர். அத்துடன் நிகழ்வு அன்று வொன்டர் லாண்டில் நுழைவாயிலில் சற்று அதிகரித்த பணத்தில் 33 டொலர்களுக்கு நுழைவுச்சீட்டு வாங்கியோர், வருடார்ந்த நுழைவுச் சீட்டுக்களைக் கொண்டோர், நிகழ்வுகளை வழங்கியோர், நுழைவுச் சீட்டற்ற 3 வயதிற்கும் உட்பட்டோர் என 15 ஆயிரத்துக்கு மேற்பட்டோர் பரமவுண்ட் வொன்டர்லாண்டில் தமிழர் நாள் நிகழ்வுகளில் கலந்து கொண்டனர். மாலை 6.45 மணி முதல் இரவு 10 மணி வரை 15 ஆயிரம் பேர் அமர்ந்து பார்க்கக் கூடிய நவீன தொழில்நுட்பத்துடன் கூடிய பிரமாண்டமான அரங்கில் தமிழர் கலை நிகழ்வுகள் நடைபெற்றன.

வெளியில் இருந்து குழுவினரை அழைத்து, நிகழ்வுகளை நடத்தாமல் கனடிய ஈழத் தமிழர் திறமைகளை மட்டும், அதிலும் குறிப்பாக இளையவர்கள் திறமைக்கு முதன்மையளித்து நடத்தப்பட்ட நிகழ்வுகள் சிறப்பாக அமைந்தன.

## தலைமைத்துவப் பயிற்சி நெறி

யாழ்ப்பாணம்

அபிவிருத்திக்கான சமூக அமைப்புகளின் வலையமைப்பு நிறுவனத்தால் இளைஞர் - யுவதிகளுக்கு தலைமைத்துவ பயிற்சி வழங்கப்படவுள்ளது.

மாதாந்தம் வழங்கப்பட்டு வரும் இந்தப்பயிற்சி நெறியில் இந்தமாதத்துக்கான பயிற்சி எதிர்வரும் 15ஆம் திகதி திங்கட்கிழமை காலை 10 மணிக்கு அரசடி வீதி, யாழ்ப்பாணத்தில் இயங்கி வரும் SOND நிறுவன தலைமை அலுவலகத்தில் நடைபெறவுள்ளது.

வடமராட்சி, தென்மராட்சி, கோப்பாய், மானிப்பாய், நல்லூர் போன்ற பகுதியில் இருந்து பயிற்சி பெற்றுவரும் இளைஞர் - யுவதிகளுக்கான தலைமைத்துவ பயிற்சியை இந்தமாதம் SOND நிறுவனத்தின் திட்டப் பணிப்பாளர் வழங்கவுள்ளார். (20)

## மலையக மக்களின் போராட்டத்துக்கு இ.தொ.காவும் ஆதரவு வழங்கும்!

கொழும்பு

மலையக தமிழ் மக்கள் தற்போது எதிர்கொள்ளும் முக்கிய பிரச்சினைகளை அடிப்படையாகக் கொண்டு நடத்தப்படும் போராட்டங்களுக்கு தமது கட்சி முழுமையான ஆதவரளிப்பதாக இலங்கை தொழிலாளர் ஐக்கிய முன்னணியின் செயலாளர் எஸ்.சதாசிவம் தெரிவித்தார்.

கடந்த சனிக்கிழமை நுவரெலியாவில் நடைபெற்ற நிகழ்வு ஒன்றில் உரையாற்றிய அவர் - அரசியல் நோக்கங்களைக் கொண்டு நடத்தப்படும் போராட்டங்களின் மூலம் பிரச்சினைகளுக்கு தீர்வுகாண முடியாது.

மலையகத்தில் இளைஞர் வேலை வாய்ப்பு, தென்மாகாணத்தில் தோட்டத் தொழிலாளர் மீதான வன்முறைகள் மற்றும் ஏனைய அடிப்படைப் பிரச்சினைகள் குறித்து போராட்டங்கள் நடத்தப்படுவது அவசியம். இந்த நிலையில் அவற்றிற்கு தமது கட்சி முழுமையான ஆதரவளிக்குமென அவர் மேலும் தெரிவித்தார்.

## முல்லைத்தீவில் 36 கரையோர கிராமங்களின் அபிவிருத்திக்கு ஆசியவங்கி நிதியுதவி

முல்லைத்தீவு

முல்லைத்தீவில் சுனாமியால் பாதிக்கப்பட்ட 36 கரையோரக் கிராமங்கள், வடக்கு - கிழக்கு கரையோர சமுதாய அபிவிருத்தித் திட்டத் தால் ஆசிய அபிவிருத்தி வங்கியின் நிதியுதவியில் அபிவிருத்தி செய்யப்படவுள்ளதாக வ.கி.ச.தூ.திட்டப் பிரதிப்பணிப்பாளர் ந.சிவலிங்கம் தெரிவித்தார்.

இது குறித்து அவர் மேலும் கருத்துத் தெரிவிக்கையில் -

30 கிராமங்கள் கரைதுறைப்பற்றிலும், ஆறு கிராமங்கள் புதுக்குடியிருப்பிலுமாக இந்தச் சுனாமி மீள் கட்டுமானத் திட்டம் நடைபெறவுள்ளது.

30 கிராமங்களில் விசேடமாக 18 கிராமங்கள் தரப்பட்டுள்ளதாகவும், அதில் பத்து கிராமங்களின் உட்கட்டுமான வேலைகள் மக்கள் மூலமாக இனங்காணப்பட்டு, ஒரு கிராமத்துக்கு ரூபா 50 இலட்சம் வீதம் வழங்கப்பட்டுள்ளதாகவும் கூறப்படுகிறது இரண்டாவதாக - அந்தந்தக் கிராமங்களின் தொழில்துறையை ஊக்குவிப்பதற்கான பயிற்சி வகுப்புக்கள் நடத்தப்படுவதுடன் சுழற்சி முறை சிறுகடன் அடிப்படையில் ஒவ்வொரு கிராம அலுவலர் பிரிவிலும் 50 இலட்சம் ரூபாவும் வழங்கப்பட்டுள்ளது.

மேலும் சூழல் பாதுகாப்புக்கும் கடலரிப்பைத் தடுப்பதற்குமான நடவடிக்கைக்கு 25 இலட்சம் தொடக்கம் 50 இலட்சம் வரை வழங்கப்பட்டுள்ளது. அத்துடன் உள்ளூர் அரச சார்பற்ற நிறுவனங்களை இனங்கண்டு, அவற்றினூடாகப் பயிற்சி வழங்குவதோடு, ஊக்குவிப்பதற்கான ரூபா இரண்டரை இலட்சம் வழங்கப்பட்டுள்ளது.

இந்த நிறுவனங்கள் கூடுதலாகப் பெண்களை ஊக்குவிப்பதற்காக அமையவேண்டும். இந்தத் திட்டமானது சுனாமியால் பாதிக்கப்பட்ட பகுதிகளில் மூன்று வருடங்களுக்கு அமுல்படுத்தப்படும். ஏனைய திட்டம் அடுத்துவருகின்ற நான்காவது ஆண்டிலிருந்து நடைமுறைபடுத்தப்படுமெனவும் அவர் மேலும் தெரிவித்தார்.

## சைக்கிள்களில் சமாந்தரமாக செல்வோர் மீது நடவடிக்கை

பரந்தன்


பரந்தன் - முல்லைத்தீவு நெடுஞ்சாலையில் அருகருகாக துவிச்சக்கர வண்டிகளில் செல்வோர் மீது விசுவமடு காவற்துறையினர் நடவடிக்கை மேற்கொண்டு வருகின்றனர்.

இவ்வாறு ஓட்டிச் செல்பவர்கள் மீது கடும் நடவடிக்கை மேற்கொண்டு, அந்த இடத்திலேயே தண்டப்பணம் அறவீடு செய்கின்றமையால் பக்கம் பக்கமாக சைக்கிள்களில் செல்வோர் தொகை குறைந்துள்ளது.

கடந்த காலங்களில் இப்படியாக அருகருகே சைக்கிள்களில் செல்வதனால், வீதி விபத்துக்கள் அதிகரித்திருந்தது. ஆனால் தற்பொழுது காவற்துறையினரின் இந்த நடவடிக்கையால் வீதி விபத்துக்கள் குறைந்துள்ளதை அவதானிக்க முடிகிறது.

நல்லூர் கொடியேற்றம்... காரை எம்.பி.அருளானந்தன்

# பூலோக கைலாசத்தில் நடைபெறும் பக்தி பூர்வமான கொடியேற்றப் பெருவிழா



சரித்திரப் பிரசித்தி பெற்ற நல்லைக் கந்தனின் பார்த்திப வருடத்துக்கான கொடியேற்றப் பெருவிழா இன்று கோலாகல மாக பக்தி பூர்வமாக நடை பெறுகிறது. தமிழ்த் தெய்வமாம் முருகனுக்கு தமிழ் மக்கள் வதி யும் இடமெல்லாம் கோயில்கள் எழுப்பப்பட்டுள்ளன. முருக னுக்கும் தமிழருக்குமிடையி லுள்ள தொடர்பு வரலாற்றிற் கும் அப்பாற்பட்டது எனலாம். எமது ஈழநாட்டில் கருணைக் கடலாகிய முருகன் கதிர்கா மத்திலும், மாவிட்டபுரத்திலும், செல்வச்சந்நிதியிலும், கந்த வனக் கடவையிலும், மண்டூரி லும், சித்தாண்டியிலும், வெருக லிலும், நல்லூர் முதலிய தலங் களிலும் கோவில் கொண்டிருக் கின்றான்.

யாழ்ப்பாணத்திலே நல்ல ஊராக சைவ அனுட்டானங்க ளுக் கெல்லாம் ஒரு குன்றாக விளங்கு வது நல்லூர். நல்லூர்க் கந்தன் கோவிலை நடுக்களனா கக் கொண்டு சுற்றியுள்ள வீதிக ளெல்லாம் முருக பக்தர்களையே காணலாம். அங்கு வதியும் மக் கள் அனைவரும் அதி காலை யில் கந்தனின் மணியோசை காதுகளில் ஒலிக்க தமது அன் றாட கருமங்களை முருகன் திரு வருள் கொண்டு ஆரம்பிக்கின் றார்கள்.

*கொடிச்சீலை*

நல்லூரிலுள்ள செங்குந்தா மரபினர் வருடா வருடம் நல் லூர் கந்தசுவாமி கோவிலில் நடைபெறும் கொடியேற்றத் திரு விழாவிற்கு தேவையான கொடிச் சீலையை அழகிய வாகனத்தில் வைத்து ஊர்வலமாகக் கொண்டு சென்று கொடுத்து வருகின்றனர்.

*வேல் வடிவில் அருள்பாலிக் கும் நல்லூரான்*

முருகன் கையில் இருப்பது வேல். இது ஞான சக்தியாகும். அஞ்ஞானப் பகையை வெல்ல ஞானவேல் தாங்கியுள்ளான் முரு கன். தன்வழி நடக்கும் அன்பர்க ளுக்கு வலப்புறத்தும், இடப் புறத்தும், முன்னும் பின்னும் எங்குமாகி இரவு பகலில் துணை யாக விளங்குவது வேல் என் கிறார் அருணகிரிநாதர்.

*தனித்த வழி நடக்கு மென திடத்தும் ஒருவலத் தும் இருபுறத்தும் அருகடுத்து இரவு பகல் துணையதாகும்*

அச்சம் அகற்றும் அயில்வேல் என்கிறார் குமரகுருபரர். எங்க ளுக்கு ஒப்பற்ற துணையாக விளங்குவது வேல். நாளும் நல் லூரை வலம் வந்து கந்தன் கழல் பணிய வினைகள் யாவும் ஓடும்.

*மஹோற்சவ சிறப்பு*

கொடியேற்றம் ஆடி அமா வாசையிலிருந்து ஆறாவது நாள் ஆரம்பிக்கிறது. தொடர்ந்து வரும் பத்தாவது நாள் மஞ்சத் திருவிழாவும், பதினேழாவது திருவிழா திருக்கார்த்திகை விழா வும், பத்தொன்பதாம் திருவிழா கைலாசவாகனத் திருவிழாவும், இருபத்து இரண்டாவது திரு விழா தண்டாயுதபாணி உற்சவ மும் (மாம்பழத் திருவிழா), இருபத்து மூன்றாம் திருவிழா சப்பற உற்சவமும், இருபத்தி நான்காம் திருவிழா தேர்த் திருவிழாவும், இருபத்தைந்தாம் திருவிழா தீர்த்தோற்சவமும், இருபத்தாறாவது திருவிழா பூங் காவனமுமென வெகு விமரிசை யாக நடைபெறும் பூலோகக்கைலா சமாக நல்லூர் காட்சியளிக்கும்.

நல்லூர் கந்தசுவாமி கோவி லில் மஹோற்சவம் ஆரம்பித்து விட்டால். அதன் அதிர்ச்சி யாழ்ப் பாணத்தில் மாத்திரமல்ல உலகம் முழுவதிலும் காணப்படு கிறது. திருவிழா வேளைகளில் எந்த மயமும் கந்த மயமாகவே காணப்படுகிறது.

*பக்தி வெள்ளம்*

எல்லா ஊர்களிலும் சிறந்த நல்லூரில் எழுந்தருளிய கந்த வேளின் மஹோற்சவம் நடை பெறும் இருபத்தைந்து தினங்க ளும் தினம்தோறும் விரதம் அனுஷ்டித்து திருக்கோயிலுக் குச் சென்று வலம் வந்து திரு விழாவில் பங்குபற்றி முருகன் அருள்பெற்று வீடு திரும்பும் பக் தர்களின் தொகையை அளவிட முடியாது.

முருகனே! மாயோன் மரு கனே! ஒரு கைமுகன் தம்பியே! உன் திருச்சந்நிதியில் வந்து நின்றால் பெரியார், சிறியார், இளைஞர், முதியோர், கற்றார், கல்லார், வறியர், செல்வர், நல்லார், தீயார், அதிகாரி, அடிமை என்ற பேதம் ஒழிந்து யாவரும் முருகன் அடியார் என்ற உணர்ச்சி ஊற்றெடுக்க தம்மை மறந்து உம்மீது காதலா கிக் கசிந்து கண்ணீர் மல்கித் துதிக்கின்றனர்.

அவனருளாலே அவன் தாள் வணங்கி, என்றாற் போல் அவன் அருளுக்குப் பத்திரமாகி வந்த வினையும், வருகின்ற வல்வினை யும் கந்தன் என்று சொல்லக் கலங்குமே என்பதை நல்லூரில் கூடும் அன்பர்கள் நன்கு அறி வார்கள். எங்கு பார்த்தாலும் முருகப் பெருமானைப் போற் றும் நினைவு முதிர்ச்சியால் அவனைத்துதிக்கும் பாடல் களே கேட்கின்றன. அவன் துணைதான் நமக்கு எதனையும் தரவல்லது என்ற ஒரு பெரு நம் பிக்கையால் துள்ளிக் குதிக்கி றார்கள்.

பக்தியில் முறுகி நிற்பவர்கள் பரிகசிக்கப் போகிறார்களே என்று எண்ணமாட்டார்கள். அந்த உள் ளக் கிளுகிளுப்பில் ஆடுகிறார் கள், பாடுகிறார்கள். திருக்கை வேல் காவல் என்று முருகப் பெரு மானை வாழ்த்தி வாய் மணக்கப் போற்றி வழிபடுகிறார்கள்.

இத்தகு வரலாற்றுச் சிறப்புக் களைத் தன்னகத்தே கொண்டு விளங்கும் நல்லூர் கந்தசுவாமி கோவில் சைவப் பெருமக்களின் தனித்துவமான பக்தியின் கரு வூலமாகத் திகழ்கின்றதென்றால் வியப்பில்லை. இன்று நடை பெறும் கொடியேற்ற விழாவு டன் ஏனைய மஹோற்சவங்க ளும் சிறப்புப் பொருந்திய னவாக அமையவுள்ளன.

## வளம் பெறக் கொடியையேற்று!



உள்ளமும் உயிரு முய்ப்ப
உலகினை உவந்து காக்கும்
வள்ளலே! வடிவே லப்பா!
வளம் பெறக் கொடியை யேற்றி
தெள்ளிய தீர்வைத் தந்து
திசையெலாம் கருணை பாய
முள்ளிலே யிருந்து மீட்டு
முகிழ்ந்திட முனைப்புத் தாராய்!

கூத்தாடி வி.சி.குஞ்சிதபாதம்

## எமக்குதவி தா முருகா

ஆறுபடை வீடுடைய ஆறுமுக வேலவனே!
ஆறுதலைத் தந்திடவா நற்பதி நல்லூரினிலே!
ஏறுகின்ற கொடியினிலே எந்தமிழர் ஒன்றாகி
வீறு கொள்ள வைத்திட வா புள்ளிமயில் மீதினிலே

எத்தர்களின் தந்திரத்தை நுட்பமதாய் வென்றிடுவோம்
எங்களரும்சுதந்திரத்தின் பெருமைதனைப்போற்றிடுவோம்
இத்தரையில் இன்பமதாய் எந்தமிழர் வாழ்ந்திடவே
சொத்தெமக்கு ஆனவனே சேர்ந்திருநல் லூரினிலே

ஏமாற்று கின்றவரை ஒழித்திடவா வேல்முருகா
எத்தர்களை இத்தருணம் அழித்திடவா மால்மருகா
நல்லைநகர் தனிலுறையும் பச்சைமணி மார்பழகா!
நாமார்க்கும் குடியல்லோம் நமக்குதவி தாமுருகா!

மாவன்னா

## நல்லூரா! உன் கொடியேற்றம் வல்லவனே வரங்கள் அருளிட எழுந்திடப்பா

நல்லூரா! உன் கொடியேற்றம்.
சொல் எடுத்து பா தொடுக்கின்றோம்.
போர் ஓய்ந்தால் சுனாமிப் பேரலையா ?
ஊர்கள் இன்னுமே அழுகின்றது பார்த்தாயா?

நல்லூரா! உன் கொடியேற்றம்.
வல்வினைகள் விரட்டுதற்தாய் எழுவாயா?
அஞ்சேல் ! என்கின்ற சுவாமி நாதனே!
சஞ்சலங்கள் தீர்ப்பதற்காய் எழுவாயா?



நல்லூரா! உன் கொடியேற்றம்.
நல்லவனே நமையாழும் கந்தவேளே!
கால்சக்கரம் வேகமாய் சுழல்கின்றது.
வாழ்வு உயர்வின்றிக் கழிவதைப் பாரா

நல்லூரா! உன் கொடியேற்றம் .
கல்லே கசிந்துருக உலாவருகிறாய்.
எல்லோரும் உனையேத்திப் பாடுகின்றோம்.
வல்லவனே வரங்கள் அருளிட எழுந்திடப்பா.

மீசாலையூர் கமலா

பொன்விழாக் கட்டுரை...


# பொன்விழாக் காணும் முல்லைத்தீவு புதுக்குடியிருப்பு மத்திய கல்லூரி




1955 ஆம் ஆண்டு தை மாதம் 15 ஆம் திகதி சைவ அபிவிருத்திச் சங்கத்தின் நன் கொடையாக வழங்கப்பட்ட நிலப்பரப்பில் ஸ்தாபிக்கப் பட்ட இந்தப் பாடசாலை மகாவித்தியாலயமாக இருந்து, இன்று கல்லூரியாக தரம் உயர்ந்து நிற்கின்றது. பொன் விழாக் கொண்டாட்ட நிகழ் வுகள் இந்த வருடம் தை மாதம் நடைபெற இருந்த போதும், சுனாமி அனர்த்தத் தால் முல்லை நகரம் முற்றா கப் பாதிக்கப்பட்டமையா லும், மக்களைத் தன்னகத்தே கொண்டிருந்தமையாலும் அந்தத் துன்பகரமான சூழ லில் இந்த நிகழ்வு பிற்போ டப்பட்டு, இன்று இடம் பெறுகிறது.

இந்தக் கல்லூரியின் 50 ஆண்டு கால வளர்ச்சிக்கு அதி பர்களும், ஆசிரியர்களும், பழைய மாணவர்களும் பக்க பலமாக இருந்துள்ளனர். கல் லூரியின் வளர்ச்சிப் படியில் பல தடைகளைக் கண்ட போதும், அதைத் தாண்டி இன்று பல வெற்றிகளைக் கண்டு ள்ளது. இந்திய - இராணுவ நடவடிக்கையின்போது ஆய்வு கூட உபகரணங்கள் சூறையா டப்பட்டது. அந்தக் காலத்தில் ஏற்பட்ட முக்கிய பாதிப்புக ளில் ஒன்றாகும்.

1996 ஆம் ஆண்டு சூரியக் கதிர் - 2 நடவடிக்கையின் போது, யாழ்.நகரில் இருந்து பல் லாயிரக்கணக்கான மக்கள் இடம் பெயர்ந்து வன்னிப் பெருநிலப் பரப்பை அடைந் தனர். இதன் போது இந்தப் பாடசாலையா னது தன்ன கத்தே அந்த மக்களைத் தாங்கி நின்றது. அந்தக் காலப்பகுதி யில் இடம்பெயர்ந்த எம் போன்ற மாணவர்களையும் உள்வாங்கிக் கொண்டது. இத னால் தற்காலிக கூரை விரிப்பி னால் வேயப்பட்ட வகுப்ப றைகளிலும், மரநிழல்களிலும், போதிய தளபாடங்களும், கற்பிக்க ஆசிரியர்களும் இல் லாத நிலையில், நிலத்தில் அமர்ந்திருந்து படிக்க வேண் டிய துர்ப்பாக்கிய நிலையை அடைந்தது. போதிய வளங் கள் இல்லாதபோதும், இருக் கின்ற வளங்களை உயர்ந்த ளவில் பயன்படுத்தி, பல்துறை களிலும் மாணவர்களைவளர்த்து விட்ட பெருமை இந்தக் கல் லூரிக்கே சேரும். இவ்வாறு மாணவர்களை கல்வி, நாட் டுப்பற்று, விளையாட்டுடன் கூடிய இணைப் பாடவிதான செயற்பாடுகளிலும் வழி நடத்தி வெற்றி கண்டுள்ளது. கல்வித்துறையில் க.பொ.த (சா/த), க. பொ.த (உ/த) பரீட் சைகளில் நல்ல பெறுபேற் றைப் பெற்று வருவதுடன், இணைப்பாட விதான செயற் பாடுகளிலும் சிறப்பாகச் செயற்பட்டு வருகின்றது. கல் வித் துறையில் மாவட்ட, தேசிய ரீதியில் நல்ல பெறுபேற் றைப்பெற்று, நாட்டின் பல பாகத்திலும் உள்ள பல்கலைக் கழகங்களுக்குத் தெரிவு செய்யப் பட்டுள்ளனர்.



# முத்தரப்பு ஒருநாள் போட்டி

# 18 ஓட்டங்களால் இந்திய அணியை வீழ்த்தி கிண்ணத்தைக் கைப்பற்றியது இலங்கை!



கொழும்பு

இந்தியன் ஒயில் கிண்ணத்துக்கான ஒருநாள் போட்டித் தொடரில் இறுதியாட்டத்தில் 18 ஓட்டங்களால் இந்தியாவை இலங்கை அணி வெற்றிகொண்டது.

நேற்று கொழும்பில் நடைபெற்ற பகலிரவு ஆட்டத்தில் நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்ற இலங்கை அணி முதலில் துடுப்பெடுத்தாடத் தீர்மானித்தது. அத்தபத்துவும், ஜெயசூரியவும் ஆரம்பத்துடுப்பாட்ட வீரர்களாகக் களமிறங்கினர்.


இருவரும் ஓட்டங்களைக் குவித்துக் கொண்டிருக்க - இலங்கை அணியின் ஸ்கோர் 32ஆக உயர்ந்த நிலையில் - முதல் விக்கெட்டாக அத்தபத்து வீழ்த்தப்பட்டார். இவர் 11 ஓட்டங்களைப் பெற்றநிலையில் நெஹ்ராவின் பந்துவீச்சில் போல்டாகி வெளியேறினார். அடுத்து டில்ஹார களமிறங்கியபோதும்-ஸ்கோர் 46ஐ எட்டியபோது 9 ஓட்டங்களைப் பெற்ற நிலையில் நெஹ்ராவின் பந்துவீச்சில் ஆட்டமிழந்தார்.

அடுத்து சங்கஹார களமிறங்கி ஆடமுற்பட்டபோதும் அவராலும் நீண்டநேரம் தாக்குப்பிடிக்கமுடியவில்லை. நெஹ்ராவின் பந்தை ஷேவாக்கிடம் பிடிகொடுத்து ஆட்டமிழந்த இவர், 8 ஓட்டங்களை மட்டுமே பெற்றுக்கொடுத்தார்.

67 ஓட்டங்களைப் பெறுவதற்குள் 3 விக்கெட்டுக்களை இழந்து தடுமாறிய இலங்கை அணி, ஜெயவர்த்தனவின் வருகையுடன் புத்துயிர் பெற்றது. ஜெயசூரிய - ஜெயவர்த்தன ஜோடி அபாரமாக ஆடி ஓட்டங்களைக் குவிக்க ஆரம்பித்தது. ஸ்கோர் 122ஐ எட்டியபோது - ஜெயசூரிய 67 ஓட்டங்களைப் பெற்றிருந்த நிலையில் ரன் அவுட்டானார்.

77 பந்துகளில் இவர் 9 பவுண்டரிகள் அடங்கலாக இந்த ஓட்டங்களைப் பெற்றிருந்தார். இதன்பின்னர் ஜெயவர்த்தனவுடன் ஆர்னோல்ட் இணைந்து நிதானமாக ஓட்டங்களைக் குவிக்கத் தொடங்கியதால், இந்தியப் பந்துவீச்சாளர்கள் பெரிதும் நெருக்கடிக்குள்ளாகினர். ஸ்கோர் 247ஐ எட்டும் வரை இந்த ஜோடியை பிரிக்கமுடியவில்லை.

5ஆவது விக்கெட்டாக வீழ்த்தப்பட்ட ஜெயவர்த்தன 97 பந்துகளில் 5 பவுண்டரிகள் அடங்கலாக 83 ஓட்டங்களைப் பெற்றிருந்தார். இவரது விக்கெட்டையும் நெஹ்ராவே கைப்பற்றினார். ஜெயவர்த்தன ஆட்டமிழந்த சற்று நேரத்தில், ஆர்னோல்ட்



64 ஓட்டங்களுடன் ரன் அவுட்டாகி பவிலியன் திரும்பினார். 63 பந்துகளில் 4 பவுண்டரிகள் அடங்கலா ஆர்னோல்ட் இந்த ஓட்டங்களைப் பெற்றிருந்தார்.

அடுத்து டில்ஷான் - வாஸ் ஜோடியும் நீண்டநேரம் நெஹ்ராவின் பந்துவீச்சில் தாக்குப்பிடிக்கமுடியாமல் பிரிந்துபோனது. டில்ஷான் 7 ஓட்டங்களுடன் ஆட்டமிழந்தபின்னர் - பெரிய எதிர்பார்ப்புக்களுடன் உபுல் சந்தன களமிறங்கினார்.

ஆனால், இவரையும் நெஹ்ரா விட்டுவைக்கவில்லை. இரண்டே இரண்டு ஓட்டங்களுடன் இவரும் பவிலியன் திரும்பினார். ஒரு புறத்தில் அடுத்தடுத்து விக்கெட்டுக்கள் விழுந்துகொண்டிருக்க வாஸ் அதிரடி ஆட்டம் ஆடிக்கொண்டிருந்தார்.



ஆனால், 9ஆவது விக்கெட்டான முரளிதரனும் ஓட்டமெதையும் பெறாத நிலையில் ரன் அவுட்டாகி வெளியேறினார்.

இந்தநிலையில், இலங்கை அணி 50 ஓவர்களில் 9 விக்கெட்டுக்களை இழந்து 281 ஓட்டங்களைப் பெற்றது. 12 உதிரி ஓட்டங்களைக் கொடுத்த பந்துவீச்சாளர்களில் நெஹ்ரா மட்டுமே 6 விக்கெட்டுக்களைக் கைப்பற்றினார்.

282 ஓட்டங்கள் பெற்றால் வெற்றி என்ற நிலையில் களமிறங்கிய இந்திய அணி ஆரம்பத்தில் மளமளவென ஓட்டங்களைக் குவித்தபோதும் - பின்வரிசை ஆட்டக்காரர்கள் கைகொடுக்காததால் 18 ஓட்டங்களால் தோல்வி கண்டது.

கங்கூலியுடன் ஜோடி சேர்ந்த ஷேவாக் அதிரடியாக - பவுண்டரிகள் சிக்ஸராக விளாசித் தள்ளினார். ஆனால் - ஸ்கோர் 62ஐ எட்டியபோது, வாஸின் பந்துவீச்சுக்கு அவர் இரையானார். 22 பந்துகளில் 9 பவுண்டரிகள், ஒரு சிக்ஸர் அடங்கலாக 48 ஓட்டங்களை எடுத்தார்.

இவருக்குப் பின்னர் ராவிட் களமிறங்கி - நிதானமாக ஆடிக்கொண்டிருக்க ஸ்கோர் 102ஆக இருந்தபோது கங்கூலி 26 ஓட்டங்களுடன் ஆட்டமிழந்தார். 45 பந்துகளில் 2 பவுண்டரிகளையே இவர் பெற்றார். இதன்பின் யுவராஜ் சிங் ராவிட்டுடன் இணைந்து ஆடி ஸ்கோரை 186வரை உயர்த்தியபோது - சந்தனவின் பந்து வீச்சில் ஆட்டமிழந்தார். ஆயினும் இவர் 58 பந்துகளில் 42 ஓட்டங்களைப் பெற்றுக்கொடுத்தார்.


அடுத்து கைவ் களமிறங்கிய போதும் எதிர்முனையில் நின்ற ராவிட் 69 ஓட்டங்களுடன் ரன் அவுட்டாகி பவிலியன் திரும்பினார். ஸ்கோர் 205ஐ எட்டுவதற்குள் முக்கியமான 4 விக்கெட்டுக்களை இழந்த இந்திய அணி, 246 ஓட்டங்களை பெறுவதற்குள் மேலும் 5 விக்கெட்டுக்களை பறிகொடுத்தது. டோனி 7, பதான் 1, ஹர்பஜன் சிங் 0, சகீர்கான் 5, கைவ் 31 ஓட்டங்களை பெற்றனர். கும்ளே மற்றும் நெஹ்ரா தலா 9 ஓட்டங்களுடன் ஆடிக்கொண்டிருந்த நிலையில் 50 ஓவர்களில் 263 ஓட்டங்களையே பெற்றதால் இந்திய அணி தோல்வியைத் தழுவியது.

பந்துவீச்சில் வாஸ், முரளி, சந்தன ஆகியோர் தலா 2 விக்கெட்டுக்களையும் டில்ஷான் ஒரு விக்கெட்டையும் கைப்பற்றினர். இந்தப் போட்டியின் ஆட்டநாயகனாகவும், ஆட்டத் தொடர் நாயகனாகவும் மஹெல ஜெயவர்த்தன தெரிவானார்.

## விளையாட்டு

# நியூஸிலாந்துடனான டெஸ்ட்

# ஒரே நாளில் இரு இனிங்ஸிலும் ஆடி படுதோல்வியுற்றது சிம்பாப்வே அணி



ஹராரே

சிம்பாப்வேக்கு எதிரான முதல் டெஸ்ட் போட்டியில் நியூஸிலாந்து அணி இரண்டே நாளில் வெற்றி பெற்றது. ஒரே நாளில் சிம்பாப்வே வீரர்கள் இரண்டு இனிங்ஸ்களிலும் ஆட்டமிழந்து மோசமான ஆட்டத்தை வெளிப்படுத்தினர்.

சிம்பாப்வே சென்றுள்ள நியூஸிலாந்து அணி இரண்டு போட்டிகள் கொண்ட டெஸ்ட் தொடரில் விளையாடுகிறது. முதல் டெஸ்ட் ஹராரே நகரில் நடைபெற்றது.

முதல்நாள் ஆட்டநேர முடிவில் நியூஸிலாந்து அணி முதல் இனிங்ஸில் 9 விக்கெட் இழப்புக்கு 452 ஓட்டங்களை எடுத்து டிக்ளேர் செய்தது. நேற்றுமுன்தினம் இரண்டாம்நாள் ஆட்டத்தில் சிம்பாப்வே துடுப்பெடுத்தாடியது. இந்த அணிக்கு தொடக்கமே படுமோசமாக அமைந்தது. பிராங்ளின் வீசிய இரண்டாவது ஓவரில் பெரிரா (5), இப்ராகிம் (0), மசகட்சா (0) ஆகிய மூவரும் வெளியேறினர்.



இக்கட்டான நிலையில் களமிறங்கிய கப்டன் தைபு 5 ஓட்டங்களை மட்டுமே எடுத்து மார்ட்டினின் பந்துவீச்சில் ஆட்டமிழந்தார். இவரைத் தொடர்ந்து ஸ்ரிக் (0), மஹவீர் (4) இருவரும் மார்ட்டினிடம் பணிந்தனர். இறுதியில் இந்த அணி முதல் இனிங்ஸில் வெறும் 59 ஓட்டங்களுக்குள் சுருண்டது.

கார்லைஸ் (20*), ரெய்லர் (10) மட்டுமே இரட்டை இலக்க ஓட்டங்களை எடுத்தனர். ஐந்து வீரர்கள் டக் அவுட்டாயினர். பிராங்ளின் 4, மார்ட்டின் 3, விற்றோரி 2, பொண்ட் 1 விக்கெட்டைக் கைப்பற்றினர்.

இதையடுத்து 393 ஓட்டங்கள் பின்தங்கிய நிலையில் பலோ-ஒன் பெற்ற சிம்பாப்வே, இரண்டாவது இனிங்ஸைத் தொடர்ந்தது.

இதிலும் மோசமான ஆட்டம் தான். விற்றோரியின் சுழலில் வீரர்கள் வந்தவேகத்தில் வெளியேறினர். மசகட்சா மட்டுமே 42 ஓட்டங்களை எடுத்தார். மற்ற வீரர்கள் சொற்ப ஓட்டங்களில் ஆட்டமிழந்தனர். இதனால் ஒரே நாளில் இரண்டாவது இனிங்ஸிலும் இந்த அணி 99 ஓட்டங்களுக்குள் அனைத்து விக்கெட்டுக்களையும் இழந்தது. இதன் மூலம் நியூஸிலாந்து அணி இனிங்ஸ் மற்றும் 294 ஓட்டங்கள் வித்தியாசத்தில் இரண்டே நாளில் வெற்றிபெற்று சாதனை புரிந்தது. 127 ஓட்டங்கள் மற்றும் 6 விக்கெட்டுக்களைக் கைப்பற்றிய விற்றோரி ஆட்டநாயகனாகத் தெரிவு செய்யப்பட்டார்.

# சான்டோ நடராசா நிலையத்தின் உடற்பயிற்சிப் போட்டி முடிவுகள்!

வடமராட்சி

மலாயன் சாண்டோ நடராசா உடற்பயிற்சி நிலையத்தினால் நேற்று முன்தினம் நடத்தப்பட்ட கயிறு இழுத்தல், கம்பிழுத்தல், மல்யுத்தம், குத்துச்சண்டை, ஆணழகன் போட்டிகள் மிகச் சிறப்பாக மின்னொளியில் நடைபெற்றன.




இதில் கம்பிழுத்தல் போட்டியில் 1ஆம் இடம் - ஒலிம்பிக் விளையாட்டுக் கழகத்தைச் சேர்ந்த ஜெயக்குமார், 2ஆம் இடம் - சென்.தோமஸ் அணியைச் சேர்ந்த எட்வேட் துரை சிங்கமும் பெற்றுக் கொண்டனர்.

மல்யுத்தப் போட்டியில் 48 தொடக்கம் 50 கிலோ பிரிவில் :-

1ஆம் இடம் - சி.ஜெயரட்ணம் (துள்ளுமீன் கழகம்), 2ஆம் இடம் - அ.ராஜ்குமார் (துள்ளுமீன் கழகம்), 3ஆம் இடம் - கே.வினோ (சாந்தன் கழகம்).

52-55 கிலோ -

1ஆம் இடம் - ஜெ.செல்வராஜ் (சாந்தன் கழகம்), 2ஆம் இடம் - எ.ரேமன் (சென்.அன்ரனீஸ் கழகம்), 3ஆம் இடம் - எ.ரெஜினோல்ட் (சாந்தன் கழகம்).

57-60 கிலோ -

1ஆம் இடம் - செ.தயாளன் (சாந்தன் கழகம்), 2ஆம் இடம் - ர.ஶ்ரீயுக ராஜா (ஒற்றுமை கழகம்), 3ஆம் இடம் - வி.சுபாஸ்கரன் (சாந்தன் கழகம்).

61-66 கிலோ :

1ஆம் இடம் - வி.அமிர்தராஜ் (துள்ளுமீன் கழகம்), 2ஆம் இடம் பி.நெல்சன் விமல்ராஜ் (துள்ளுமீன் கழகம்), 3ஆம் இடம் - எஸ்.விஜயராஜா (கந்தா கழகம்).

குத்துச் சண்டைப் போட்டியில் :

48-50 கிலோ பிரிவு -

1ஆம் இடம் - ரா.கதிரவன் (யாழ். குத்துச்சண்டை சங்கம்), 2ஆம் இடம் - அன்ரன் யூட்குமார் (யாழ்.குத்துச் சண்டை சங்கம்), 3ஆம் இடம் அ.சுரேஸ் (சென்.தோமஸ் கழகம்).

51-53 கிலோ பிரிவில் -

1ஆம் இடம் - சி.தீபன் (மலாயன் சாண்டோ கழகம்), 2ஆம் இடம் - சி.சிவசெல்வரட்ணம் (வல்வை இளங்கதிர் கழகம்), 3ஆம் இடம் ஜெ.ஜெகதீசன் (பிளைக் ஸ்ரார் கழகம்).

54-56 கிலோ பிரிவில் -

1ஆம் இடம் - சு.கிருபாகரன் (யாழ். குத்துச் சண்டைச் சங்கம்), 2ஆம் இடம் - கு.சபேஸ் (மலாயன் கழகம்), 3ஆம் இடம் - ச.அன்ரன் அருள்ராஜ் (பிளைக் ஸ்ரார் கழகம்).

57-60 கிலோ பிரிவில் -

1ஆம் இடம் - மா.தர்மராசா (பிளைக் ஸ்ரார் கழகம்), 2ஆம் இடம் - ப.சுகந்தன் (பிளக் ஸ்ரார் கழகம்), 3ஆம் இடம் - யோ.ரகுதாஸ் (யாழ். குத்துச் சண்டை சங்கம்).

65-67 கிலோ பிரிவில் -

1ஆம் இடம் - வி.ஜெயகிருஷ்ணன் (பிளைக் ஸ்ரார் கழகம்), 2ஆம் இடம் - ரி.ஶ்ரீதரன் (யாழ்.குத்துச் சண்டை சங்கம்), 3ஆம் இடம் - கே.சிவரூபன் (ரேவடி கழகம்).

73 கிலோவுக்கு மேல் - பிளைக் ஸ்ரார் கழகத்தைச் சேர்ந்த சி.சிவகுமார் முதல்சுற்று முடிவதற்கு முன்னரே எதிரியை நிலைகுலையச் செய்து 1ஆம் இடத்தைப் பெற்றார். 2ஆம் இடம் - சி.ஜாதவகுமார் (யாழ். குத்துச்சண்டை சங்கம்), 3ஆம் இடம் - த.சாந்தலிங்கம் (பிளைக் ஸ்ரார் கழகம்) பெற்றுக் கொண்டனர்.

ஆணழகன் போட்டியில் 21 வயதுக்குட்பட்டவர்களில் -

1ஆம் இடம் - நா.சிவகணேஷன் (மலாயன் கழகம்), 2ஆம் இடம் - ஜெயசீலன் (ஒலிம்பிக் கழகம்), 3ஆம் இடம் - ஆனந்தகுமார் (மலாயன் கழகம்).

21-30 வயதுப் பிரிவில் 1ஆம் இடம் - டொமினிக் பிரபாகரன் (மலாயன் கழகம்), 2ஆம் இடம் - சிவராசா மாதவன் (ஒலிம்பிக் கழகம்), 3ஆம் இடம் - மா.பகீரதன் (மலாயன் கழகம்).

30 வயதுக்கு மேல் -

1ஆம் இடம் - கோணேஸ்வரன் (காண்டீபன் கழகம்), 2ஆம் இடம் - அருமைத்துரை (காண்டீபன் கழகம்), 3ஆம் இடம் ரஜிதரன் (மலாயன் கழகம்) பெற்றுக் கொண்டனர். (12)

நமது ஈழநாடு
The Namathu Eezhanadu
The Leading Daily of Tamils' Homeland

# தமிழீழ தேசிய தொலைக்காட்சியை அரசாங்கம் தடைசெய்யவேண்டும்!

## ஹெல உறுமய கோருகிறது

கொழும்பு —

விடுதலைப்புலிகளால் ஆரம்பிக்கப்பட்டுள்ள செய்மதி தொலைக்காட்சிச் சேவையை நிறுத்துவதற்கு அரசாங்கம் உடனடியாக நடவடிக்கை எடுக்கவேண்டுமென ஜாதிக ஹெல - உறுமய கோரியுள்ளது. இது குறித்து ஜாதிக ஹெல உறுமய வெளியிட்டிருக்கும் அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது -

விடுதலைப்புலிகள் தென்னாசியாவைச் சுற்றி வளைக்கும் வகையில் செய்மதி தொலைக்காட்சிச் சேவையினை ஆரம்பித்துள்ளனர். இந்த தொலைக்காட்சிச் சேவை மூலம் அவர்களது தமிழீழ கருத்துக்களையும், அரசிற்கு, இராணுவத்திற்கு, சிங்கள இனத்திற்கு எதிரான பிரசாரத்தையும் ஆரம்பித்துள்ளனர்.

விடுலைப்புலிகளின் இந்த செயற்பாடானது இலங்கைக்கு மட்டுமல்லாது, தென்னாசியாவிற்கே அழுத்தம் கொடுக்கின்ற பாரதூரமான அறைகூவலாகும்.

முழு உலகமும் ஒன்றிணைந்து பயங்கரவாதத்திற்கெதிராக சட்டரீதியாகவும், பாதுகாப்பு ரீதியாகவும் கடுமையான நடவடிக்கைகளை மேற்கொண்டுவரும் வேளை, விடுதலைப்புலிகள் இவ்வாறானதொரு செயற்பாட்டை மேற்கொண்டமை ஆச்சரியமளிக்கும் விடயமாகும்.

பொறுப்புள்ள அரசாங்கம் என்ற வகையில் விடுதலைப்புலிகளின் இந்த தொலைக்காட்சி சேவையை நிறுத்துவதற்கு தேசிய மற்றும் சர்வதேச ரீதியில் நடவடிக்கை எடுக்க வேண்டும்.

எமது இந்தக் கோரிக்கைக்கு சாதகமாக அடுத்த சில தினங்களில் அரசாங்கம் செயற்படாது போனால், விடுதலைப்புலிகளின் தொலைக்காட்சி சேவைக்கு அரசாங்கமும் ஆதரவளிக்கிறது என்பது தெரிய வரும்.

எனவே, இந்த தொலைக்காட்சி சேவையை நிறுத்த அரசாங்கம் உடன் நடவடிக்கை எடுக்கவேண்டும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (தே)

# பொற்பதி வீதி விபத்து; சாரதி விளக்கமறியலில்!

யாழ்ப்பாணம் —

கொக்குவில் - பொற்பதி வீதியில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற விபத்துடன் சம்பந்தப்பட்ட கன்ரர் வாகனச்சாரதியை எதிர்வரும் 17 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்க யாழ்.நீதிமன்ற நீதிவான் ஆர்.ரி.விக்னராஜா உத்தரவிட்டார்.

நேற்றுமுன்தினம் பொற்பதி முதலாம் ஒழுங்கையில் கன்ரர் வாகனத்துடன் மோட்டார் சைக்கிள் மோதியதில் மாணவி ஒருவர் பலியானார்.

மேற்படி சம்பவத்தில் கன்ரர் வாகனத்தைச் செலுத்திவந்த சாரதியான செல்லத்துரை மகேந்திரன் நேற்றுமுன்தினம் பொலிஸ் நிலையத்தில் சரணடைந்தார். இவரை மானிப்பாய் பொலிஸ்நிலைய குற்றத்தடுப்புப் பிரிவு பொலிஸார் நேற்று யாழ். நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தினர்.

வழக்கை விசாரித்த நீதிவான் ஆர்.ரி.விக்னராஜா இந்த நபரை எதிர்வரும் 17 ஆம் திகதி வரை தடுத்துவைக்குமாறு உத்தரவிட்டார். அத்துடன், விபத்து நடைபெற்ற இடத்துக்கு நேற்று மீண்டும் சென்று பார்வையிட்ட நீதிவான் இந்த விபத்துத் தொடர்பான விசாரணைகளை மேற்கொண்டார்.

# ஜனாதிபதித் தேர்தல் குறித்து மைத்திரிபால மனுத்தாக்கல்!

2006 ஆம் ஆண்டிலேயே அடுத்த ஜனாதிபதித் தேர்தலுக்கான திகதியை உயர் நீதிமன்றம் தீர்மானிக்க வேண்டுமெனக் கோரி, சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் பொதுச் செயலாளர் மைத்திரிபால சிறிசேன மனுவொன்றைத் தாக்கல் செய்தார்.

இந்த ஆண்டிலேயே ஜனாதிபதித் தேர்தலை நடத்துமாறு கோரி ஜாதிக ஹெல உறுமய உறுப்பினர் சங்கைக்குரிய ஓமல்பே சோபித தேரர் தாக்கல் செய்த மனுவை ரத்துச் செய்யுமாறும் அவர் தனது மனுவில் கேட்டுள்ளார்.

அரசியல் யாப்புப்படி ஜனாதிபதி 2006 ஆம் ஆண்டுவரை அதிகாரத்தில் இருப்பதற்கு உரிமை வழங்கப்பட்டிருப்பதாகவும் இந்த மனுவில் அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

# பளையில் தற்காப்பு பயிற்சி

கிளிநொச்சி —

கிளிநொச்சி மாவட்டத்தின் பளைப் பிரதேசத்துக்குட்பட்ட மக்களுக்கான தற்காப்புப் பயிற்சி இன்று மாலை 3 மணிக்கு பளை பொது விளையாட்டுத் திடலில் ஆரம்பமாகவுள்ளதாக கிளிநொச்சி மாவட்ட அரசியற்துறைப் பொறுப்பாளர் சிவநாத் தெரிவித்தார்.

இந்த தற்காப்புப் பயிற்சி வழங்குவதற்கான ஏற்பாடுகளை கிளிநொச்சி மாவட்ட தேசிய எழுச்சிப் பேரவையினர் மேற்கொண்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

# சோமாலியா கப்பல் விவகாரம் இன்னும் தீர்வு ஏதுமில்லை!

கொழும்பு —

சோமாலியாவில் கிளர்ச்சிவாதிகள் தடுத்துவைத்துள்ள இலங்கையைச் சேர்ந்த கப்பல் கப்டன் மகாலிங்கம் உட்பட 10 பணயக்கைதிகளை விடுவிப்பதில் இன்னமும் பதில் எதுவும் வெளியாகவில்லை என அறிவிக்கப்பட்டுள்ளது.

கடந்த ஜூன் மாதம் 27 ஆம் திகதி ஐக்கியநாடுகள் சபையின் உணவுப் பொருட்களை ஏற்றிச்சென்ற இந்தக் கப்பல் கிளர்ச்சிவாதிகளால் கைப்பற்றப்பட்டு தடுத்து வைக்கப்பட்டுள்ளது.

இந்தக் கப்பலில் சுனாமியால் பாதிக்கப்பட்டவர்களுக்கென ஜப்பான் மற்றும் ஜேர்மனி ஆகிய நாடுகள் அன்பளிப்புச் செய்த 850 தொன் அரிசி கொண்டு செல்லப்பட்டது.

இந்த நிலையில், குறித்த அன்பளிப்புப் பொருட்கள் சோமாலியாவிலுள்ள மக்களுக்கு விநியோகிக்கப்பட வேண்டும். மற்றும் 10 மாலுமிகளையும் விடுவிக்க வேண்டுமாயின் ஐந்து லட்சம் டொலர்கள் கப்பமாக வழங்கப்படவேண்டும் என கிளர்ச்சிவாதிகள் நிபந்தனை விதித்திருந்தனர்.

எனினும், பின்னர் கப்பலில் கொண்டு செல்லப்பட்ட அரிசியை மாத்திரம் சோமாலிய மக்களுக்கு விநியோகிக்கவேண்டும் என்ற நிபந்தனையுடன் கப்பலில் உள்ளவர்களை விடுவிக்க கிளர்ச்சிவாதிகள் அண்மையில் இணக்கம் தெரிவித்தனர்.

எனினும், இரண்டு நாட்களாகியும் வேறொரு பதிலும் வெளியாகவில்லை என குறித்த கப்பல் நிறுவனம் தெரிவித்துள்ளது.

தாம் ஆயுததாரிகளின் பதிலை எதிர்பார்ப்பதாக அந்த நிறுவனம் குறிப்பிட்டுள்ளது. (01)

# கருணா குழுவைச் சேர்ந்தவர் கற்குடாவில் சுட்டுக் கொலை!

மட்டக்களப்பு —

மட்டக்களப்பு மாவட்டத்திலுள்ள வாழைச்சேனை கற்குடாவில் நேற்றிரவு இளைஞர் ஒருவர் இனந்தெரியாத நபர்களால் சுட்டுக் கொல்லப்பட்டார். மோட்டார் சைக்கிள் ஒன்றில் கடத்தி வரப்பட்ட இளைஞரே கற்குடாவில் வைத்துச் சுட்டுக் கொல்லப்பட்டதாகத் தெரிவிக்கப்படுகிறது.

நேற்றிரவு 7.30 மணியளவில் இடம்பெற்ற இந்தச் சம்பவத்தில் கொல்லப்பட்ட இளைஞர் அடையாளம் காணப்படாத போதும் - இவர் கருணா குழுவைச் சேர்ந்தவர் என படைத்தரப்புத் தகவல்கள் தெரிவித்தன.

## 30 நிமிடங்களுக்குள்...

நீதிவானுக்கு அறிவிப்பதுடன் - அவர் சம்பவ இடத்துக்குச் செல்வதற்கான ஏற்பாடுகளை உடன் செய்து கொடுக்க வேண்டுமென நீதிபதி உத்தரவிட்டார்.

இவ்வாறான சம்பவங்கள் நடைபெற்ற பகுதிக்கு நீதிவான் உடனடியாகச் சென்று தடயங்கள், சான்றுப் பொருட்கள் என்பவற்றை நேரில் பார்வையிடுவதன் மூலம் அதன் பின்னர் தோன்றும் குற்றச் செயல்களை ஓரளவு தடுக்க முடியும்.

இவ்வாறான குற்றச்செயல்கள் நடைபெறுகின்றபோது, உடன் விசாரணை மேற்கொண்டு நடவடிக்கை எடுக்கவேண்டும் என்று அவர் மேலும் தெரிவித்தார்.

இதேவேளை, இணுவிலில் கடந்த வியாழக்கிழமை நடந்த துப்பாக்கிச்சூட்டுச் சம்பவத்தில் இளைஞர் ஒருவர் பலியான சம்பவம் தொடர்பாக பொலிஸ் மிகவும் தாமதமாகவே நீதிவானுக்கு அறிவித்ததாகக் கூறப்படுகிறது.

பிற்பகல் 1 மணிக்கு நடந்த சம்பவம் தொடர்பாக மாலை 5 மணிக்கே நீதிவானுக்கு தெரியப்படுத்தப்பட்டதாகவும் - நீதித்துறை வட்டாரங்கள் விசனம் தெரிவித்தன.

சம்பவ இடத்துக்கு நீதிவான் உடனடியாகச் சென்றிருந்தால் அசம்பாவிதங்கள் நிகழாமல் தடுத்திருக்க முடியும் என்றும் அந்த வட்டாரங்கள் மேலும் தெரிவித்தன.

## வீதியால் சென்ற வாகன...

மேற்கொண்டனர்.

நேற்றுக்காலை 11 மணியளவில் தொடங்கிய சோதனை நடவடிக்கைகள் பிற்பகல் 2 மணிவரையும் தொடர்ந்தது.

இதன்போது சைக்கிள், மோட்டார் சைக்கிள், ஹையேஸ் வான்கள், மினிபஸ்கள், வடபிராந்திய போக்குவரத்துச் சபை பஸ்கள் உட்பட அனைத்து வாகனங்களும் நிறுத்தப்பட்டு பயணிகளை இறக்கி கடுமையான சோதனை நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டதுடன் - வீதிகளில் நிறுத்தப்பட்டிருந்த வாகனங்களும், உதிரிப் பாகங்களும் பரிசோதனைக்குட்படுத்தப்பட்டன.

இதனால், பொதுமக்கள் பெரும் சிரமங்களை எதிர்நோக்கியதைக் காணக்கூடியதாக இருந்தது. அத்துடன், இத் திடீர் சோதனை நடவடிக்கைகளை இராணுவத்தினர், பொலிஸார் இணைந்து மேற்கொள்வதால் பொது மக்கள் மத்தியில் அச்சம் நிலவுகிறது.

இவ்வாறான சோதனை நடவடிக்கைகள் மீண்டும் ஆரம்பித்திருப்பதால் இராணுவக் கெடுபிடிகள் அதிகரிக்குமா என்று பொதுமக்களிடையே அச்சம் நிலவி வருகின்றமையும் குறிப்பிடத்தக்கது. (14)

## பாதுகாப்பாக திரும்பி....

விபத்துக்குள்ளான பின்னர் முதன்முறையாக விண்வெளிக்குச் சென்ற டிஸ்கவரி விண்கலம் - 14 நாட்கள் ஆய்வுப்பணியை முடித்து நேற்றுமாலை பூமிக்குத் திரும்பியது.

நேற்றுமுன்தினம் பி.ப 4.30 மணியளவில் அமெரிக்காவின் புளோரிடாவில் உள்ள ஏவுதளத்தில் டிஸ்கவரி தரையிறங்கத் திட்டமிட்டிருந்தது.

ஆனால், புளோரிடாவில் காலநிலை சீரற்றிருந்ததால் டிஸ்கவரி தரையிறங்குவது 24 மணி நேரம் தாமதப்படுத்தப்பட்டதுடன், அது புவி வட்டப்பாதையில் நிறுத்தப்பட்டது.

நேற்று டிஸ்கவரி பூமியில் தரையிறங்குவதற்கான அனைத்து ஏற்பாடுகளும் செய்யப்பட்டிருந்தன. புளோரிடாவில் காலநிலை சீரற்றிருந்தாலும், தரையிறக்குவதற்காக கலிபோர்னியா மற்றும் மெக்சிக்கோ ஆகியவற்றிலும் தரையிறங்குவதற்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டிருந்தன.

அமெரிக்க நேரம் நேற்று அதிகாலை 5.12 மணிக்கு (இலங்கை நேரம் மாலை 6.12) டிஸ்கவரி விண்கலம் பாதுகாப்பாக கலிபோர்னியாவில் உள்ள எட்வேட்ஸ் விமானப் படைத்தளத்தில் தரையிறங்கியது.

இதில் சென்ற 7 விண்வெளி வீரர்களும் பத்திரமாக பூமிக்குத் திரும்பினர்.

மணிக்கு 322 கி.மீ வேத்தில் தரையிறங்கிய விண்கலம், பரசூட்கள் மூலம் வேகம் குறைக்கப்பட்டு 22 ஆவது ஓடுபாதையில் நிறுத்தப்பட்டது.

## ஜெயசூரிய...

வீரராக இணைந்துகொண்டார்.

சச்சின் டெண்டுல்கர், இன்சமாம் - உல்-ஹக், சௌரவ் கங்கூலி ஆகியோர் ஏற்கனவே ஒருநாள் போட்டிகளில் பத்தாயிரம் ஓட்டங்களைக் கடந்து சாதனை படைத்திருந்தனர்.

36 வயதான ஜெயசூரிய 337 போட்டிகளில் இந்தச் சாதனையை எட்டிப் பிடித்துள்ளார்.

## பொதுக்கட்டமைப்பு...

கள் கூட்ட முடிவின்படி நாளையும் நாளை மறுதினமும் சுனாமி மீளமைப்புக்கான பொதுக்கட்டமைப்புத் தொடர்பான விவாதம் நாடாளுமன்றில் நடைபெறவுள்ளது.

## கருணா குழுவின் ஆயுத...

டும் சமாதானப் பேச்சுவார்த்தை ஆரம்பிக்கப்படுவதனை குழப்புவதற்காகவாகும்.

ஆழமான காட்டுப் பகுதியினுள் நடவடிக்கையை மேற்கொள்வதென்பது அரசாங்கத்திற்கு நெருக்கடிமிக்கதாக அமையும்.

அத்துடன், இவ்வாறான ஒரு நடவடிக்கையை மேற்கொள்வது போர்நிறுத்த ஒப்பந்தத்தை முறிவடையச் செய்யலாம். இலங்கை இராணுவத்தைப் பொறுத்தவரையில் அவர்கள் கருணா குழுவின் எந்தவொரு நடவடிக்கைக்கும் ஆதரவாக செயற்படவில்லை.

கருணா குழு ஒரு ஆயுதக்குழு அல்ல. ஏனெனில், அவர்கள் போர் நிறுத்த ஒப்பந்தத்திற்கு முன்னர் அவ்வாறு இருக்கவில்லை.

அரசாங்கத்துடன் மீண்டும் பேச்சுவார்த்தைகளில் விடுதலைப் புலிகள் ஈடுபடுவதற்கு சர்வதேச சமூகம் அவர்களுக்கு அழுத்தங்களைக் கொடுக்க வேண்டும்.

விடுதலைப்புலிகள் மீது ஐ.நா. தடையை விதிப்பதற்கான உத்தரவை வழங்கவேண்டும்.

விடுதலைப்புலிகளை அரசியல் நீரோட்டத்தில் ஈடுபடவைப்பதற்கு நாம் முயற்சிகளை மேற்கொள்ள வேண்டும். அதற்காகவே விடுதலைப்புலிகளும் கவனத்தை செலுத்தி காத்துக்கொண்டிருக்கின்றனர் என நான் சந்தேகத்திற்கிடமின்றி கருதுகின்றேன் என அவர் மேலும் தெரிவித்தார்.

இதேவேளை, கிழக்கில் செயற்படும் ஆயுதக்குழுக்களால் மீண்டும் யுத்தம் வெடிக்கும் ஆபத்து இருப்பதாக போர்நிறுத்தக் கண்காணிப்புக் குழு எச்சரித்திருந்தும்,

உதவிவழங்கும் நாடுகள் துணைப்படைகளின் ஆயுதங்களை அரசு களையவேண்டும் என அண்மையில் கோரியிருந்தமையும் குறிப்பிடத்தக்கது.

## சமாதானத்தை ஏற்படுத்துவதற்காக...

சிகளினால் எவ்வித பிரயோசனமும் இல்லை. இந்த 6 மாதப்பயிற்சியை நிறைவு செய்த கடற்படையைச் சேர்ந்த ஒருவருக்கு இது போதுமான பயிற்சியாக அமையவில்லை. நாம் ஓய்வுபெற்றுச் செல்லும் வரை பெருமளவு விடயங்களை கற்கவேண்டியுள்ளது. இவ்வாறு பல் விடயங்களைக் கற்பதனால் தொழில் மட்டத்தில் உயர்வைச் சந்திக்கலாம்.

இதன் மூலம் கடற்படையினரின் எதிர்காலத்திற்கு சிறப்பான ஒரு முன்னோடியாக அமைகின்றது. எனவே நாம் தினமும் கற்க வேண்டும். இன்று இந்த நாட்டில் போர் நிறுத்தம் நிலவுகின்றது. போர் நிறுத்தம் என்பது நடைபெறுகின்ற யுத்தத்தை தற்காலிகமாக நிறுத்துவதாகும். போர் நிறுத்தம் சமாதானத்தில் முடிவடையும். இல்லையேல் யுத்தத்தில் முடிவடையும்.

நாம் அனைவரும் சமாதானத்தை விரும்புகின்றோம். சமாதானத்தை சிப்பாய்களே அதிகம் விரும்புகின்றனர். ஏனெனில், அவர்கள்தான் யுத்தத்தின் பயங்கரத்தை நேரடியாக காண்கிறார்கள். ஆனால், பலவீனமான, சிறுபிள்ளைத்தனமான சமாதானத்தில் எமக்கு உடன்பாடில்லை.

நாட்டின் இறைமை ஒருமைப்பாட்டிற்கு சிறிதளவேனும் பங்கம் ஏற்படாத வகையிலான சமாதானத்தை மாத்திரம் நாம் விரும்ப வேண்டும்.

போர் நிறுத்தம் நிலவும் காலத்தில் எங்களுக்கு பொறுப்பாக இருக்க வேண்டியது - நன்கு பயிற்சி பெற்று, ஆயுதபாணியாக மனத்தைரியத்தை வளர்த்து மீண்டும் யுத்தம் ஏற்பட்டால் அதற்கு பயனுள்ள வகையில் முகம் கொடுத்து தாய் நாட்டைப் பாதுகாக்க வேண்டும்.

விடுதலைப்புலிகள் போர்நிறுத்தத்தை யுத்த தந்திரமாகப் பயன்படுத்துவதை நாம் அனுபவங்கள் மூலம் அறிவோம். இந்தக் காலப் பகுதியில் அவர்கள் யுத்தம் மற்றும் பொருளாதார, அரசியல் ரீதியாக பலமடைகின்றனர் என்பதையும் நாம் அறிவோம்.

விடுதலைப்புலிகள் மற்றும் வேறெவராலும் மக்களின் இயல்பு வாழ்வைக் குலைத்து சமாதானத்தை குலைப்பதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்படுமாக இருந்தால் அவர்களுக்கெதிராக நடவடிக்கை எடுக்க நாம் பின்வாங்கக் கூடாதெனவும் அவர் தெரிவித்தார். (தே)

ஜூலை 15 முதல் ஓகஸ்ட் – 15 வரை என்றும் இல்லாத வகையில் அசத்தலான தள்ளுபடி 25% வரை
இன்றே விரையுங்கள்...
ஓசானிக் இம்பெக்ஸ்
192, பிரதான வீதி, கொழும்பு – 11.
T.P.011 - 2336720, 011 - 2327168

இப்பத்திரிகை இல.267, நாவலர் வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள நமது ஈழநாடு அச்சகத்தில் 10.08.2005 அன்று பொன்னுத்துரை குருதேவ் அவர்களால் அச்சிட்டு வெளியிடப்பட்டது.